விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (22.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மகிந்தவின் அராஜக ஆட்சியை கவிழ்ப்பேன்!

## சிறை மீண்ட சரத் பொன்சேகா சூளுரை

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷவின் அராஜக ஆட்சியைக் கவிழ்பதுதான் எனது ஒரே இலக்கு. இவ்வாறு நேற்று சிறை மீண்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சூளுரைத்தார்.**

நேற்று மாலை சிறையில் இருந்து விடுதலை பெற்ற அவர் மக்கள் மத்தியில் உரையாற்றும்போதும் அதற்கு முன் நீதிமன்ற வளாகத்தில் திரண்டிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரைநிகழ்த்தும் போதுமே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

(19ஆம் பக்கம் பார்க்க)



## சரத்தின் 27 மாத கால சிறைவாசம் முடிபு; ஆதரவாளர்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்பு

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று மாலை 4.48 மணியளவில் வெலிக்கடை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

27 மாத கால சிறைத் தண்டனை அனுபவித்து வந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதை அடுத்து அவரின் ஆதரவாளர்கள் நாடளாவிய ரீதியில் களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

பட்டாசு கொளுத்தி, நாட்டின் தேசியக் கொடி மற்றும் சரத் பொன்சேகாவின் படம் ஆகியவற்றை கையிலேந்தி அசைத்த வண்ணம் அவர்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

அதேவேளை, சரத் பொன்சேகா விடுதலையான தினத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இங்கிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனினும் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான ஆவணங்களில் அவர் கையொப்பம் இட்டபின்னரே கட்டாருக்குப் புறப்பட்டார் என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து அமெரிக்கா மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

வாஷிங்டனுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடம் அமெரிக்க அதிகாரிகள் இது குறித்து கலந்துரையாடினர்.

2010-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக களமிறங்கிய சரத் பொன்சேகா 41 இலட்சத்து 73 ஆயிரத்து 185 வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தார்.

இந்நிலையில், 2010 பெப்ரவரி 8 ஆம் திகதி அவர் கைது

(19ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா வரவேற்பு

முன்னாள் இராணுவத்தளப்தி சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

பொன்சேகாவை ஓர் அரசியல் கைதி என வர்ணித்துள்ள அமெரிக்கத் தூதரக பேச்சாளர், முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவின் விடுதலையை நாம் வரவேற்கிறோம் என தெரிவித்தார். (ந-8-11)

## ஜே.வி.பி. அதிருப்தி

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை வேட்பாளராக நிறுத்தி ஜனநாயக தேசிய முன்னணி என்ற கூட்டணியில் பங்கெடுத்த ஜே.வி.பி, சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டிருக்கின்ற விதம் குறித்து அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விடுதலை முழுமையாக இருந்தால், ரத்துச் செய்யப்பட்ட அவரது ஓய்வூதியக் கொடுப்பனவும், அரசியலில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கான

(02ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்திற்கு பயந்தே விடுதலை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் தலையை சர்வதேசம் எனும் மாபெரும் கத்தி பதம் பார்த்து விடுமோ என்ற அச்சத்தாலேயே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய அரசு முன்வந்துள்ளது.

இவ்வாறு புதிய சிஹல உறுமய கட்சியின் செயலாளர் சரத்

(19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைக்கு நிபந்தனை விதிப்பா? எனக்கு எதுவும் தெரியாது-டிரான்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவதற்கு ஏதேனும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தமக்கொன்றும் தெரியாது என ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொன்சேகா நேற்று நவலோகா வைத்தியசாலையில் இருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு வந்திருந்தபோதே டிரான் அலஸ் எம்.பி ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரி வித்தார்.

டிரான் அலஸ் எம்.பியே பொன்சேகாவின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8;11)

## நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரையை ஏற்க முடியாது -ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை ஏற்றக் கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், ஆணைக்குழு பரிந்துரைகள் பற்றி தமது நிலைப்பாட்டை வெளியிடுமாறு அரசாங்கம் அண்மையில் கோரியிருந்தது. இதன் அடிப்படையில் ஜாதிக ஹெல உறுமய கட்சி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றிய தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும், பெரும்பான்மை சிங்கள மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்துள்ளதாகவும் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்

(19ஆம் பக்கம் பார்க்க)



## மோ.சைக்கிள் விபத்தில் கிராம சேவையாளர் பலி

(கரவெட்டி)

வடமராட்சி குஞ்சர்கடை சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கிராமசேவையாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

கொற்றாவத்தை சமரபாபு பகுதியில் இருந்து யாழ்.நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் சங்கானை

(19ஆம் பக்கம் பார்க்க)

## காலாவதியான மருந்தைக் குடித்த 3 வயது சிறுவன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

காலாதிவதியான மருந்தினை குடித்த மூன்று வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கெருடாவில் தெற்கு தொண்டைமானாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது போத்தலில் இருந்த காலாவதியான பாணி மருந்தை குடித்த சிறுவன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

காலாவதியான மருந்து நஞ்சடைந்தமையாலேயே இவ் உயிரிழப்பு ஏற்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் கெருடாவிலைச் சேர்ந்த ராஜசேகரம் றொசான்(வயது 3) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (ந-4-6)

## பற்றைக் காணியில் ஆண் குழந்தை

பிறந்தவுடன் அநாதையாக்கப்பட்ட ஆண் குழந்தையொன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியிலுள்ள பற்றைக் காணி ஒன்றினுள் இருந்து நேற்றுக் காலை 6 மணியளவில் குறித்த ஆண் குழுந்தை மீட்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தை தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அப்பகுதி மக்களினால் மீட்கப்பட்ட குழந்தை யாழ்ப்பாணம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-6;4)

# ஜே.வி.பி.அதிருப்தி...

சுதந்திரமும் இழக்கப்பட்ட இராணுவ அந்தஸ்துகளும் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் மக்கள் விடுதலை முன்ணியின் பிரசாரச் செயலர் விஜித ஹேரத் சுட்டிக் காட் டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த சூழ்நிலையில் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டது முதல் தமது கட்சியினர் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருந்ததாகவும், தாம் உட்பட 13 பேர் அண்மையில் காலியில் நடத்திய போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டதாகவும் கூறிய விஜித ஹேரத், தான் இன்னும் நீதிமன்ற பிணையில் தான் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பொன்சேகாவுக்காக போராட்டம் நடத்தியவர்கள் பலர் பல்வேறு துயரங்களை எதிர் நோக்கியிருப்பதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் சுட்டிக்காட்டினார்.

சரத் பொன்சேகாவின் கைது விவகாரத்தை அவரது தனிப்பட்ட விவகாரமாகக் கருத முடியாது என்றும் அது பொதுவான அரசியல் பிரச்சினை என்றும் அதனால் நிபந்தனையுடன் கூடிய விடுதலை ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்று குறிப்பட்ட அவர்,

நாட்டில் இன்னும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தொடர்வதாகவும், ஆயிரக் கணக்கான அரசியல் கைதிகள் இன்னம் சிறையில் வாடுவதாகவும், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அரை-இராணுவ ஆட்சி நடப்பதாகவும் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதியுடன் ஜனநாயக தேசிய முன்னணி (டி.என்.ஏ) நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலெஸும் அனோமா பொன்சேகாவும் நடத்திய பேச்சுவார்த்தை களில் ஜே.வி.பி எந்த விதத்திலும் பங்கெடுக்க வில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ந-8-11)


## கூலித் தொழிலாளி பதவி வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்திற்கு உடனடியாக கூலித் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரம் உடையோர் மட்டும் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 29.05.2012-ம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

தொழிலாளியாகவும் சாரதியாகவும் தங்கியிருந்து பணிபுரிதல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தகைமைகள்

- வயது எல்லை 21-50
- சாரதி அனுமதிப் பத்திரம்-உழவு இயந்திரம்
- அனுபவம்-சாரதிப் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் வேண்டும்.
- பிறப்பு சான்றிதழ் (சமர்ப்பித்தல் வேண்டும்)
- வதிவிடச்சான்றிதழ் (சமர்ப்பித்தல் வேண்டும்)
- நற்சான்றிதழ் (சமர்ப்பித்தல் வேண்டும்)

விண்ணப்ப முகவரி
தி.இராசநாயகம்
(தலைவர்)
மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம்,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

(C-049)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சு.சபேஸ்குமார் அவர்களின் மைத்துனரான நவரத்தினம் ஸ்ரீஸ்குமார் (கிராம சேவையாளர்) 21.05.2012 இல் அகால மரணமாகியதையிட்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கிளி/நகேந்திரா வித்தியாலயம்
புளியம்பொக்கணை, பரந்தன்

அதிபர், ஆசிரியர்கள்

(ஈ-053)

## தூய ஆவியின் சுபிஷேகப்பெருவிழா 2012

கரம்பொன் ஊர்காவற்துறை அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களில் (இம்மாதம் 23, 24, 25 திகதிகளில்) மாலை 4.00 - 5.30 மணிவரை பெந்தகோஸ்தே விழாவிற்கான ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.

26.05.2012 சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஞாயிறு அதிகாலை 4.30 மணிக்கு பெந்தகோஸ்தே பெருவிழா திருப்பலியோடு நிறைவு பெறும்.

தொடர்ந்து 30.05.2012 அன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் திருநாள் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 03.06.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழா திருப்பலி திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

அன்னையின் ஆசிர்பெற்று நலமுடன் வாழ
அன்புடன் அழைக்கின்றோம்.

- கரம்பொன் பங்கு மக்களும் பங்குத்தந்தையும்

(C-054)


YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
FOUNDATION LEVEL
23.05.2012 : புதன் : பிற்பகல் 3.30 மணிக்கு
INTERMEDIATE LEVEL
26.05.2012 : சனி : பிற்பகல் 3.00 மணிக்கு
- முழுக்கட்டணம் : 1500 ரூபாய் (மூன்று மாதப்பயிற்சி)
- இலவசம் : முதலிரு வகுப்புகள்

வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8460)

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்
கலகலப்பு
மசாலா கபே
இலங்கை இந்திய ஒரே வெளியீடு
D.T.S.
10.30, 2.30, 6.30

அலுவலக தேவைக்கு


நீண்ட கால குத்தகைக்கு வெற்றுக்காணி, வீட்டுடன் காணி ஒன்று யாழ் நகரை அண்மித்த பகுதியில் தேவை. ஏனைய பிரதேசங்களும் ஏற்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778980652

(C-038)


# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை சிவதாசன்



பருத்தித்துறை புலோலியூரைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Neuenradeஐ வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிவதாசன் அவர்கள் 16.05.2012 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை, பாமாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், கணேசமூர்த்தி, வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயந்திமலர் அவர்களின் அன்புக் கணவரும், சஜி, கஜானா, சானுஜந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகதாசன் (லண்டன்), தேவதாசன் (லண்டன்), கண்ணதாசன் (இலங்கை), விஜயதாசன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மலர்வதனி, குமுதினி, காந்தலக்ஷ்மி, வசந்திமலர், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாசன், தாரணி ஆகியோரின் அன்புச் சகலனும், அபிவர்ஷி, நிருஜன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சயந்த், தனுஜந் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், வர்சிகா அவர்களின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 23.05.2012 நாளை புதன்கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை Katholischer Friedhof, Ander Hartmecke, 58791 Werdohl எனும் இடத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கந்த உடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி, பருத்தித்துறை.
T.P: 077-6701212 (தாசன் வீடியோ)
021-226-3872

தகவல்: கிருஷ்ணபிள்ளை குடும்பத்தினர்

(C-055)

## இன்று ஒரு தகவல்

# மகாவீரர்

அவர் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவர். இருக்கிற சொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு தவம் செய்வதற்காக காட்டுக்குப் புறப்பட்டார். அவரிடமிருந்த அனைத்தையும் தானம் செய்துவிட்டார். இனி அவரிடம் எதுவுமே இல்லை.

அவ்வேளையில் கடைசியாக ஒருவன் வந்து கையை நீட்டினான். "ஐயா... ஏதாவது கொடுங்கள்" என்றார்.

அவரிடம் கட்டியிருக்கிற வேட்டியைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. வேட்டியோ எட்டு முழம்... அதுவும் பட்டு வேட்டி. ஜரிகைக் கரையோடு இருக்கிறது.

கடைசியாக அதைத்தான் எடுத்துக் கட்டிக்கொண்டு அவர் புறப்பட்டு இருக்கிறார்.

எதிரிலே அவன் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான். அந்த எட்டு முழவேட்டியை இரண்டாக கிழித்தார்.

4 முழத்தை அவரிடம் கொடுத்தார். மீதி 4 முழத்தை தான் இடுப்பிலே கட்டிக்கொண்டு அவர் காட்டுக்குப் புறப்பட்டார்.

இவன் கையிலே கிடைத்த 4 முழத்தை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனான். அக்கடையில் பழைய பட்டு வேட்டி– ஜரிகை எல்லாம் விலைக்கு வாங்கும் வணிகர் ஒருவர் இருந்தார்.

அவரிடம் சென்று "இதை விலைக்கு எடுத்துக்கொள்கிறீர்களா?" என்றான். அதை வணிகர் வாங்கிப் பார்த்தார்.

"ஆகா... மிகவும் அருமையான வேட்டி– விலை உயர்ந்த ஜரிகை. இது எப்படி உங்களுக்கு கிடைத்தது?" என்று கேட்டார்.

அவன் நடந்தவற்றை சொன்னான்: "அப்படியென்றால் ஒன்று செய்... இந்த வேட்டியின் இன்னொரு பாதியையும் மெதுவாக வாங்கிக்கொண்டு வா... உனக்கு நான் அதிக பணம் தருகிறேன்" என்றார்.

இவன் சற்று யோசித்துப் பார்த்தான். "சற்றுப் பொறுங்கள்... இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு நேராக காட்டுக்குப் போனான். அவர் எங்கே இருக்கிறார் என்று தேடி கண்டு பிடித்தான். அவர் ஒரு இடத்தில் தவக்கோலத்தில் இருப்பதைக் கண்டான்.

கட்டியிருந்த இடைவேட்டியும் அவர் அறியாமலே நழுவி கீழே விழுந்து கிடந்தது. இது இவனுக்கு மிகவும் வசதியாகிவிட்டது.

உடனே மெதுவாக நடக்கும் சத்தம் கேட்காமல் அடி மேலே அடி வைத்து அவர் அருகில் நெருங்கினான்.

அவர் கண்களை மூடிக் கொண்டு இருந்தார். இவன் மெதுவாக போய் கீழே கிடந்த அந்தத் துணியை எடுத்துக் கொண்டு சத்தம் எதுவுமின்றி திரும்பி நடந்தான்.

சற்று தூரம் நடந்து விட்டு; ஓட ஆரம்பித்தான். அச்சமயத்தில் அவனது காலிலே... கீழே கிடந்த முள் ஒன்று "நறுக்"கென குத்தியது.

வலி தாங்க முடியாமல் "அம்மா" என்று கத்திவிட்டான். இந்த சத்தத்தில் கண்ணை மூடிக்கொண்டிருந்த அவரின் தவம் கலைந்தது.

மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். தன் இடையிலே இருந்த வேட்டி அவன் கையிலே இருக்கிறது.

இப்போது அவர் நினைக்கிறார். "இந்த வேட்டி மீது நான் வைத்த ஆசை அல்லவா அவனைத் திருடனாக மாற்றி விட்டது!"

தான் ஒரு பொருள் மேலே வைத்த பற்று... இன்னொரு மனிதனை திருடனாக மாற்றுவதற்குக் காரணமாகிவிட்டது" என்று நினைக்கிறார்.

அப்படி நினைத்த அவர் யார் தெரியுமா? அவர்தான் மகாவீரர்.

"இழந்து விட்டேன்... இழந்து விட்டேன்... என்று சொல்கிறாயோ... நீ எதைக் கொண்டு வந்தாய்... இங்கே இழந்து விடுவதற்கு? நீ எதை உண்டாக்கினாயோ... அது அழிந்து விட்டது... என்று சொல்வதற்கு?"

இது அவருடைய சிந்தனை. இன்று நமது சிந்தனையெல்லாம் வேறு மாதிரி இருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 13 பிளஸை தீர்வாக வழங்குவோம்; ஆனால் வழங்கமாட்டோம்!

## அரசின் இரட்டை வேடம் இது என்கிறார் லால்காந்த

வடபகுதியில் தேவையான இடங்களில் மட்டும் இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி மக்களின் சுதந்திரமான வாழும் உரிமைக்கும் சிவில் நிர்வாகத்திற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கங்களின் ஏற்பாட்டாளரும் ஜே.வி.பியின் முன்னாள் எம்.பியுமான கே.ரீ.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை உலக நாடுகளின் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முப்பது வருடகால பகங்கரவாதம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டது. எனவே, வடபகுதி மக்களுக்கு சிவில் நிர்வாகம் வழங்கப்பட வேண்டும். அதிகளவில் இராணுவ பிரசன்னம் மக்களின் சுதந்திரமான வாழும் உரிமைக்கு இடைஞ்சலானதாகும். முப்பது வருடகால பயங்கரவாதம் காணப்பட்ட பிரதேசமாகையால் தேவையான இடங்களில் மட்டுமே இராணுவத்தை பயன்படுத்த வேண்டும். இதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வெளிநாட்டுக் கொள்கை அரசாங்கத்திடம் இராஜதந்திர ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கை இல்லை. இந்தியாவுக்கு சென்று 13 பிளஸ் தீர்வு வழங்குவோமென்று கூறப்பட்டது. கிருஷ்ணா இலங்கை வந்தாலும் இவ்வாறே தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் ஜனாதிபதி இதை நிராகரிக்கின்றார். இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான கொள்கையையே அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

எனவே, அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை உலக நாடுகளில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இராஜதந்திர ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கை அரசிடம் கிடையாது. (அ–2)

# மஹாபொல புலமைப்பரிசில் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின ஏற்பாட்டில் 2010/2011 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் மாவட்ட செயலக நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 130 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-100 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 70 |
| தக்காளி | 120 | 180 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 30 |
| கோவா | 50 | 70 | 60 | 60 |
| கரட் | 60 | 70 | 60 | 80 |
| பூசணி | 20 | 30 | 20 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 70-100 | 90 | 70-80 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- | 70 |
| பயற்றங்காய் | 60 | 100 | 70 | 40 |
| லீக்ஸ் | 120 | 160 | 100 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 120-150 | 200 | 250 | 160 |
| போஞ்சி | 110 | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 80 | -- |
| கீரை – 1 பிடி | 10-15 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 20 | 15-20 |

# இராசி பலன்

22.05.2012
(வைகாசி 09, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
பிரதமை காலை 7.33 மணிவரை
ரோகினி பிற்பகல் 3.25 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்** இனிமையான செய்திகள் இல்லம் தேடி வரலாம், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், உத்தியோக உயர்வுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**இடபம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கலாம், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டும் நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் பொறுப்புக்கள் அதிகரிப்பதால் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், தொலைதூரப் பயணங்கள் செல்லும் வாய்ப்புண்டு; விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி** சாமர்த்தியமான பேச்சால் சாதனை படைக்கும் நாள், நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பாக்கிகள் வசூலாகலாம்.

**துலாம்** கௌரவக்குறைவான நாள், விட்டுக் கொடுத்துச் செல்வதில் வெற்றி கிடைக்கலாம், கோபமாகப் பேசிவிட்டு பின்னர் வருந்தவேண்டி வரலாம், போசன சுகமுண்டு, முயற்சிகள் தாமதமாகும்.

**விருச்சிகம்** யோகங்கள் வந்து சேர யோசித்துப் செயற்பட வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.


**தனுசு** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைகள் உடைக்கும் நாள், உடல் நலம் சீராகும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், இழுபறியாக இருந்த பிணக்குகள் தீரும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 9

சிவவழிபாடு நிலவியதையும் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்ததையும் சான்றாதாரப்படுத்தும் சின்னமாக 'நந்தி' இருப்பது இங்கு நோக்குதற்குரியது. தென்னிலங்கையில் கிடைத்த கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயம் ஒன்றில் ஷிவ என்ற பெயருடன் நந்தியின் பாதமும் பொறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துரைப்போர் நந்தியின் பாதம் கூட வழிபடுவதற்குரியதென்பதைச் சுட்டி நிற்பதாகக்

## நாணயங்களில் பொறிக்கப்பட்ட நந்தி உருவம் தமிழர்களின் சிவதரிசிப்பை காட்டிநிற்கும் சான்று

கொள்வர்.

சிந்துவெளி நாகரிக கால முத்திரைகள் பலவற்றில் நந்தியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதை அடிப்படையூகக் கொண்டு சிந்துவெளி நாகரிகத்தில் சிவவழிபாடு நிலவியமை நிரூபிக்கப்படுகின்றது. இது தவிர கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தென்னாசியாவில் புழக்கத்திற்கு விடப்பட்ட முத்திரை நாணயங்கள் பலவற்றில் நந்தி உருவம் பல 'வடிவங்களில் பொறிக்க்ப்பட்டுள்ளதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.




ஈழத்திலும் தமிழ் மன்னர்கள் தமது ஆட்சியில் வெளியிட்ட நாணயங்களில் நந்தியை பொறித்துள்ளனர்.

இலங்கையில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் தமது இனத்தை குறிப்பதற்காக சிங்கத்தை பொறித்தபோது, தமிழ் மன்னர்கள் தமது சமயத்தை சுட்டி நிற்பதாக நந்தியைப் பொறித்தனர் என்ற தகவலை பேராசியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் உறுதி செய்துள்ளார்.


ஆக, இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ் மன்னர்கள் ஆட்சியில் நந்தி பெற்றிருந்த பெருமைக்கு அன்றைய காலத்து நாணயங்களும் சான்றாகின்றன.

இவற்றிலிருந்து தமிழ் மக்களின் வாழ்வில், அவர்களின் விழுமியங்களில் நந்தி பெற்ற பெருஞ்சிறப்பை நாம் பார்க்க முடியும்.

**ஈழத்து ஆலயங்களில் இடபம்**

தமிழ்மொழியின் சிறப்பிற்கு காரணம் அம்மொழியில் இருக்கக்கூடிய சொற்களஞ்சியமாகும். ஒத்த கருத்துள்ள சொல் என்று நாம் தமிழில் கூறிக்கொண்டாலும் ஒத்த கருத்துக்குள்ளும் சில வித்தியாசங்கள் இருப்பதை தமிழ் வல்லாளர்கள் உணர்ந்து கொள்வர். களவும் திருட்டும் கொள்ளையும் உடைமையை பறிகொடுத்ததற்கான வெளிப்படுகையாக இருந்தாலும் களவு தெரியாமலும் கொள்ளை தெரிந்தும் எடுக்கப்படுவதென்பது இங்கு உணர்தற்குரியது. இதுபோல தமிழில் அம்மான் என்றும் மாமா என்றும் இரு சொற்பதங்கள் உண்டு.

சமகாலத்தில் 'அம்மான்' என்ற சொல் அருகிவிட்டதாயினும் அரசியலில் 'பொட்டு அம்மான்' என்ற பெயர் 'அம்மானை' ஞாபகப்படுத்தவே செய்கின்றது.




தாயின் உடன் பிறந்த சகோதரனை மாமா என்று அழைப்பதைவிட அம்மான் என்று அழைப்பது மரியாதையின்பாற்பட்டதாக எங்கள் முன்னோர்கள் கருதிக் கொண்டனர். எனினும் 'அம்மான் இப்போது வழக்கொழிந்து விட்டது.

மாமா என்பது மனைவியின் தந்தையைக் குறிப்பதாகும். இதுபோன்றே அத்தையும் மாமியும் உறவு முறை ஏற்பட்ட வழிமுறையை மற்றவர்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

அந்தவகையில் இங்கு காளை என்றும் எருது என்றும் நந்தி என்றும் இடபம் என்றும் அழைப்பது குறித்து நோக்கலாம்.

## காளை, நந்தி, எருது, இடபம் என்ற வேறுபட்ட பெயரின் கருத்து யாது?

காளை என்பது ஆண்மாட்டின் இளம் பருவத்தைக் குறிப்பதாகும்.

காளைமாட்டில் ஒரு குழப்பத்தனம் இருக்கும். கட்டுக்கடங்காத பருவமும் கூட,

நந்தி என்பது சிவாலயங்களில் பலிபீடங்களில் இருப்பதைக் குறிப்பதாகும். பலிபீடங்களில் இருக்கின்ற நந்தியைப் பார்த்து எருது என்றோ 'காளை என்றோ' கூறுவதில்லை.

நந்தி என்பது எருதுவைக் குறிப்பதாக இருந்தாலும் அது முழுமுதற் கடவுளாகிய சிவனைநோக்கி தவம் செய்யும் கோலத்தில் இருப்பதாகும்.

எனவே நந்திக்கு இருக்கக்கூடிய மகிமை சிவனை பார்த்தவண்ணமே இருப்பதாகும்.

இதுதவிர, எருது என்ற பதத்தை நாம் எங்கள் வாழ்வில் எங்கு பயன்படுத்துகின்றோம் என்று நோக்குதல் இங்கு பொருத்துடையது.

வண்டில் இழுக்கப் பழக்கப்படாத ஆண் மாட்டை காளை என்கின்றோம்.

வண்டில் இழுப்பதற்கும் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கும் காளைமாட்டை பழக்கப்படுத்தி அதனைச் செய்விக்கும்போது எருது என்கின்றோம்.

ஆக, வேலை செய்யக்கூடிய- பாரம் இழுக்கக்கூடிய பக்குவத்தைக் கொண்டுள்ள மாட்டை எருது என்றழைப்பதை அனுபவத்தில் காணமுடியும்.

**சுருதிவானவனாம் திருநெடுமாலாம்...**
**..........எருது வாகனனாம்...**

என்ற திருமுறைப் பாடலில் இடம்பெறும் எருது என்பது இறைவனைத்தாங்கி நிற்பதை குறிக்கின்றது. இறைபரம்பொருளைத்தாங்கி நிற்கின்ற போது எருது என்றாகின்றது.

ஆக, காளை மாடு என்ற சொற்பதத்தை ஆலயங்களில் பிரயோகிப்பதில்லை என்பதை இவற்றிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

அதாவது கட்டுக்கடங்காத காளை மெய்ஞ்ஞானத்தை உணராத- பரிபக்குவமடையாத பருவத்தைக் கொண்டது.

இதன் காரணமாகவே காளை மாடு என்றாயிற்று. நந்தி, இடபம், எருது, விடை என்ற சொற்பதங்களுடன் மாடு என்ற பதத்தை யாரும் சேர்ப்பதில்லை.

ஆனால் காளை என்பதுடன் 'மாடு' என்பது இணைந்துகொண்டு 'காளை மாடு' என்றாகின்றது.

இங்குதான் தமிழின் சிறப்புத் தெரிகிறது.

அதாவது கட்டுக்கடங்காதபோது காளை என்றோம். அது இறைவழிபாட்டைச் செய்யும்போது நந்தி என்றாயிற்று.

இறைவனைத் தாங்கும்போது எருது என்றும் வழிபாட்டுக் காலங்களில் குறிப்பாக பிரதோச விரத காலங்களில் இடபம் என்றும் அழைக்கப்படுவதற்கு நந்தியின் வேறுபட்ட நிலைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இத்தகைய வேறுபட்ட பெயர்கள் ஐந்தறிவு படைத்த ஜீவராசிகள் பலவற்றுக்கு இல்லையாயினும் சிலவற்றுக்கு இருக்கக்கூடிய, ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் அவற்றின் வயதுவேறுபாட்டிற்குரியதேயன்றி எருதுவைப் போலன்று.

ஆண்மாட்டை காளை, நந்தி, எருது, இடபம் என்று அழைப்பதற்குள் இருக்கக்கூடிய நாம வேறுபாடு இறைவனுடனும் இறை தொண்டுடனும் வழிபாட்டுடனும் தொடர்புபடுத்தப்பட்டதாக இருப்பது நந்திக்குரிய சிறப்பேயன்றி வேறு எதற்கும் அல்ல என்று இவ்விடத்தில் கூறமுடியும்.

(வளரும்)

**விதுரன்**

# துணுக்காய் வலய பாடசாலைகளில் பயன்தரு மரங்கள் நாட்டப்பணிப்பு

வன்னிப் பகுதியில் சட்டவிரோதமாக மரக்கடத்தல்கள் மூலம் பயனுள்ள மரங்கள் அழிக்கப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையாக துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 60 பாடசாலைகளிலும் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்படவேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஏல்.மாலினி வெனிற்றன் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் புறச்சூழ்நிலையை அழகுபடுத்தி மாணவர்களின் மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் நோயற்ற வாழ்விற்கு மனித சமுதாயத்தை கொண்டு செல்லும் நோக்குடனேயே இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


இச் செயற்பாட்டின் கீழ் பலா,புளி,வேம்பு,மா, தென்னை, மலைவேம்பு,கயூ,தோடை போன்ற பல வகையான மரக்கன்றுகளை பாடசாலைச் சமூகத்தினருடன் பெற்றோர்,பழைய மாணவர் இணைந்து நடுகை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-7-9-15)


ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் -2012

22.05.2012 செவ்வாய்க்கிழமை
தங்கச்சப்பறம்
இரவு 07.00மணி
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com இணுவில்
(இ-001)


# ஈழத்தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் இணைந்த சர்வதேசியத்தை உருவாக்க வேண்டும்

## தமிழ்த்தேசிய பொதுவுடைமைக் கட்சி செயலாளர் வெங்கட்ராமன் தெரிவிப்பு



தமிழீழ விடுதலையை முன்னெடுத்த தந்தை செல்வாவும் தமிழீழ தேசியத் தலை வர் பிரபாகரனும் இந்தியாவை எதிரியாக ஓரிடத்திலும் சொன்னதில்லை. ஆனால் இந்தியாவோ தமிழர்களை தான் முதன்மைப் பகையாகக் கருதுகின்றது என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் தோழர் கி.வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் படுகொலைநாளை நினைவுகூரும் வகையில் திருத்துறைப் பூண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் நடை பெற்ற நினைவேந்தல் கூட்டம் நடை பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா ஈழத்தமிழர்களுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்ததாக சொல்கிறார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தமிழை பகையாகக் கருதும் ஆரிய இனத்தின் இன்றைய அரச வடிவம் தான் இந்தியா.

1947 வெள்ளையர்கள் ஆட்சி முடிவுக்கு பின்னர் தான் நாம் ஆரிய இந்தியாவில் பலவற்றையும் இழந்திருக்கின்றோம். யாரெல்லாம் தமிழர்களுக்கு எதிரியோ இந்தியா அவர்களுக்கு நண்பன். அதனால் தான் தமிழ் நாட்டு மீனவர்களை சுட்டுக்கொல்லும் சிங்களவர்களுடன் நட்பு கொள்கின்றது.

காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு என தொடர்ந்து தமிழகம் அண்டை தேசிய இனங்களால் வஞ்சிக்கப்படும் போது அத் தேசிய இனங்களுக்கு ஆதரவாகவும் தமிழ் நாட்டிற்கு எதிராகவும் தொடர்ந்து நடந்து கொண்டுள்ளது. எனவே இந்தியா ஆரியத்தின் வடிவம் தான்.


அதனால் தான் இன்று ஈழத்தமிழர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உதவுவதும் தமிழர்கள் என்றாலும் அனைவரையும் இந்தியா எதிரியாக கருதுகின்றது.பாலஸ்தீன தேசத்திற்கு எப்படி இஸ்ரேல் உடனடிப் பகையாக விளங்குகிறதோ அதைப் போலவே ஈழத்தமிழர்களுக்கு சிங்களம் உடனடிப் பகை. அதே போல் பாலஸ்தீன தேசத்திற்கு அமெரிக்கா எப்படி சர்வதேசப்பகையோ அதைப் போல ஈழத் தமிழர்களுக்கு இந்தியா தான் சர்வதேச பகை. இந்தத் தெளிவோடு ஈழத் தமிழர்கள் தம் அரசியல் முன்னெடுப்பு நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போருக்கு தமிழ்நாட்டுத் தமிழர்கள் துணை நிற்பது போல் தமிழ்நாட்டு உரிமைக்கான போராட்டங்களுக்கு ஈழத்தமிழர்களும் ஆதரவளிக்க வேண்டும். தமிழீழ விடுதலை- தமிழ் நாட்டு விடுதலை ஆகிய இரு வேலைத் திட்டங்களின் அடிப்படையில் தமிழ்தேசியம் கட்டமைக்கப்படவேண்டும். ஈழத்தமிழர்களும், தமிழ் நாட்டுத் தமிழர்களும் இணைந்த தமிழர் சர்வதேசியத்தை உருவாக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(உரிமையாளர் நாதன்ஸ்ரோஸ் வாரிவளவு, முன்னாள் வர்த்தக பத்மநாதன் ஸ்ரோஸ்-இங்கிரியா)




காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் நேற்று 21.05.2012 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் வர்த்தகர் இங்கிரியா கணபதிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான முன்னாள் வர்த்தகர் கல்கமுவ ஸ்ரோஸ் நடராஜா-மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ஹேமாவதி கௌரிஅம்பாள் (அதிபர் யா/சுப்பிரமணிய வித்தியாசாலை காரைநகர்), கல்யாணி கனடா, ஐங்கரன் (உதவி முகாமையாளர், சமுர்த்திவங்கி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கெங்காதரன்( உரிமையாளர் சேரமான் அரிசி ஆலை கிளிநொச்சி), அருள்மொழி(CSKயாழ்ப்பாணம்), கணேசலிங்கம் (கனடா), யாழினி(தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனும், சபேசன், சஞ்சீவன், சஜீபன், சசிரூபன், சானுஜன், நிஷாந்தி (கனடா), சயந்தன் (கனடா), வசீகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பூமணி, இராஜேஸ்வரி மற்றும் பாலசிங்கம் (வர்த்தகர் நீர்கொழும்பு), அம்பிகைபாகன்(லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான, பொன்னம்பலம்(V.P), டாக்டர் இளையதம்பி மற்றும் சறோஜினிதேவி, சந்திரா, லலிதாம்பிகை, விமலாம்பிகை, அன்னலட்சுமி, தவமலர், பாக்கியம், வரதராசா, செல்வராசா, நவமலர், மங்கயற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.



அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று (22.05.2012) மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.

வாரிவளவு, காரைநகர்.
தொ.பே.இல:-0213215114

(சி-052)



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் சுகவாழ்வை நோக்கி என்னும் தொனிப்பொருளில் மருத்துவக் கண்காட்சி நேற்றைய தினம் மருத்துவ பீட வளாகத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் கண்காட்சியின் ஒரு பகுதியையும் கண்காட்சியைபார்வையிட வந்த மாணவர்களின் ஒருதொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## தங்க நகை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பிரதான வீதியிலிருந்து தங்கநகை ஒன்று 15 நாட்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தங்க நகையை தொலைத்தவர்கள் 0779469561 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதுடன் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம். (அ)

## வியாபார கணிதப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வியாபாரம் (HNDA முதலாம் வருடம்) பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பணிப்பாளர் எஸ். ஜே.எம். சஹாஜன் அறிவித்துள்ளார். (அ)

## தென்மராட்சியில் கிராமசேவையாளர் மீது தாக்குதல்கள் தொடர்கின்றன

### மக்கள் விசனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிராம அலுவலர்கள் மீது இனந்தெரியாதோரின் தாக்குதல் தொடர்வதையிட்டு பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஜே/334 எழுதுமட்டுவாழ் கிராமத்தில் பதில் கிராம சேவையாளராக கடமையாற்றிய க.ஞானேஸ்வரன் கடமை நேரத்தில் இனம்தெரியாதோரால் தாக்கப்பட்டார்.

அதன்பின்னர் பாதுகாப்புக்கோரி தென்மராட்சி கிராம சேவகர்கள் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் பொது மக்களுக்கான சேவையை ஆற்றிவந்தனர்.

மீளவும் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் தமது கிராம அலுவலகங்களில் பொதுமக்களுக்கான சேவையை செய்ய முடிவு செய்யப்பட்டது.

ஆயினும் கடந்த 17 ஆம் திகதி இரவு மற்றுமொரு கிராம அலுவலர் மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு தமது அலுவலக திறப்பை எடுத்துக்கொண்டு வெளியே வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்தது.

அவர் உடனடியாக அருகில் இருந்த பொலிஸ் நிலையத்திற்கும் படைமுகாமுக்கும் தகவலை தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் அருகில் இருந்த பற்றைக்குள் சேதமாக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் கண்டெடுக்கப்பட்டது. (அ-3-29)

## இரண்டாம் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நாயன்மார் நால்வரை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

இரண்டாந்திருமுறை முற்றோதல் யாழ்ப்பாணம் நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிக்கும் வார நாட்களில் பிற்பகல் 4.30 மணிக்கும் நடைபெறுகின்றது. விரும்பும் அடியார்கள் பங்குபற்றிப் பயன்பெறவும் என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கோண்டாவில்பிரதேசத்தின் மேற்குப்பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வட்டார ரீதியாக ஆதன விபரங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பமாகியது

### வேலணைப் பிரதேசசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபை 35 வருடங்களின் பின்னர் வட்டார ரீதியாக ஆதனங்கள் தொடர்பான விபரங்களை திரட்டி வருவதாக வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

இதற்கமைய அல்லைப்பிட்டி உப அலுவலக முதலாம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஆதனத்திற்குரிய காணி உறுதியின் மூலப் பிரதி, அதன் போட்டோ பிரதி, குடும்ப அட்டை மூலப் பிரதி, அதன் போட்டோப்பிரதி, காணி நில அளவைப் படத்தின் மூலப்பிரதி, அதன் போட்டோப் பிரதி என்பவற்றினைக் காண்பித்து ஒவ்வொரு ஆதனத்துக்குமான தகவல் திரட்டும் படிவத்தை பூரணப்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி முதலாம், 2 ஆம் வட்டார மக்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரையும் 3 ஆம், 4 ஆம் , 5ஆம் வட்டார மக்கள் ஜூன் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

பொதுமக்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது ஆதன உரித்தைப் பேணுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)




## இலவச தேவார பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் கொழும்புத்துறை சிவ தொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரமத்தில் வட இலங்கைச் சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானத்திற்கு அமைவாக வாராந்த செவ்வாய்க் கிழமைகளில் பிற்பகல் 5 மணி தொடக்கம் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பை நடத்தி வருகின்றனர்.

ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் இப்பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. இப்பயிற்சி வகுப்பில் இருபாலாரும் பங்கு பற்றிப் பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

## மகளிர் அபி. நிலையத்தின் கலைக்கண்காட்சி

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல், அழகியல், கண்காட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மீசாலை திருமுருகன் சனசமூக நிலையத்தில் இயங்கும் சாவகச்சேரி மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி நவரட்ணம் ரஞ்சனா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவிருந்தினர்களாக மீசாலை கிழக்கு கிராம சேவையாளர் செல்லத்துரை மதியழகன், தென்மராட்சி கிராம, மாதர் அபிவிருத்தி சங்கங்களின் சமாசச் செயலாளர் செல்லையா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-29)

## தனி அலகாக இயங்கவுள்ள கொடிகாமம் ஆரம்பப்பாடசாலை

(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு தனி அலகாக கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் கடந்த 17 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆயிரம் பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் மேற்படி வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு தனி அலகாக மாற்றப்பட்டது.

இவ் ஆரம்பப் பிரிவு பாடசாலையின் அதிபராக திருமதி பு. மங்களேஸ்வரன் கடமையை பொறுப்பேற்றுள்ளார். (அ-3-29)

## நூல் வெளியீட்டு விழா


(இருபாலை)

சிவாஹம விசாரத் முத்தமிழ்க் குருமணி கலைமாமணி டாக்டர் சாம்பசிவ ஸ்ரீ சோமஸ்கந்த குருஜியின் ஆகமச்சித்திரங்கள் பாகம் 4(சாக்தம்) நூல் வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் கலாநிதி சிவஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நூலுக்கான ஆசியுரையை வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களும் சிறப்புரையை பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதனும் ஆய்வுரையினை பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மாவும் நிகழ்த்தவுள்ளனர். (7-136)

# வைகாசி மாத இராசி பலன்

# 14.05.2012 - 14.06.2012



## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்**

### திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

**மற்றவர்களின் மனம் நோகாத அளவிற்கு பேசும் மிதுன இராசி நேயர்களே!**

குழந்தை மனம் பெற்றவர்கள் நீங்கள். மனதிற்குப் பிடித்ததை உடனடியாக செய்ய வேண்டும் என்று சொல்வீர்கள். உங்களுக்கு சரியென்று தோன்றுவதையெல்லாம் உடனுக்குடன் சொல்லி விடுவதால் நட்பு பகையாகிறது. பகை நட்பாகிறது. கொடுக்கல், வாங்கல்களில் ஏற்ற- இறக்கங்களை ஒருசில சமயம் சந்திக்க நேரிடும். அதற்காக கவலைப்படாமல் உங்கள் முன்னேற்றத்திலேயே குறிக்கோளாக இருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் புதன் 11 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார வசதி பெருகும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். திருமண காரியங்கள்முதல், திட்டமிட்டுச்செய்யும் தொழில் வரை அனுகூலங்கள் கிடைக்கும்.

மாதத் தொடக்கத்திலேயே தனாதிபதி சந்திரன் 9 இல் சஞ்சரிப்பதால் தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். சிந்தனையில் இருந்த குழப்பங்கள் மாறும். சேமிப்பும் உயரும். எந்த விதத்திலாவது நான் முன்னேறிக் காட்ட வேண்டும் என்ற வைராக்கியத்தை பூர்த்தி செய்துகொள்வீர்கள். மந்தன் சனி வக்ர கதியில் இருப்பது ஒரு வழிக்கு யோகம்தான்.

உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். குருப்பெயர்ச்சியும் இம்மாதத்தில் நடைபெறகிறது. வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் குருப்பெயர்ச்சி இந்த ஆண்டு உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறது. 7, 10 க்கு அதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் உங்கள் இல்லத்தில் வந்து சேரப்போகிறது. அதன் பார்வை பலத்தால் விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரப்போகிறது. கடன்சுமை குறையவும், கவலைகள் தீரவும், உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப் போகிறது. முறையாக குரு வழிபாட்டையும் மேற்கொண்டால் முறையான சர்ப்ப சாந்தியும் செய்து கொள்வது நல்லது.

**இடப புதனின் சஞ்சாரம்**

மே 15 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் மற்றும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் 12 இல் சஞ்சரிக்கும்பொழுது சில விரயங்களை ஏற்படுத்தலாம். விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடும். குறிப்பாக வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் கேட்ட உதவிகள் கிடைக்கும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி**

மே 17 ஆம் திகதி எண்ணற்ற இனிய மாற்றங்களை தரும் குருப்யெர்ச்சியில் அந்த குருவின் பார்வை பதியும் இடங்களில் எல்லாம் புனிதமடையப் போகிறது. உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களுக்கு உரிய ஆதிபத்தியங்கள் எல்லாம் இனி துரிதமாக நடைபெறப்போகின்றன. வெளிநாட்டு அனுகூலம் கிட்டும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுவீர்கள். வங்கிகளில் வாங்கிய கடனை எப்படி அடைப்பது என்று குழம்பிய உங்களுக்கு, ஒரு புதிய வழி பிறக்கும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் இனிமாறும். மாற்றுமருத்துவம் மகத்தான பயனைத் தந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள். நீண்டதூரப் பயணங்கள் ஒரு சிலருக்கு வந்தாலும் சுயஜாதக அடிப்படையில் அதை ஏற்றுக்கொள்வது நல்லது.

**மிதுன புதனும், இடப சுக்கிரனும்**


மே 31 ஆம் திகதி இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இது யோகம்தான். குடும்ப ஒற்றுமை கூடும். மன நிம்மதியோடு பணியைத் தொடர்வீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வீட்டுத்தேவைகள் அனைத்தும் உடனுக்குடன் பூர்த்தியாகும். ஜூன் 9 ஆம் திகதி அன்று சுக்கிரன் வக்ரமடையப் போகிறார். 5, 12 க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் வரவும் செலவும் சமமாகும். பிள்ளைகளின் மனப்போக்கை புரிந்துகொள்ள இயலாது. பேச்சாற்றல் மிக்க ஒருவர் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

இம்மாதம் பெருமாள் வழிபாடு உங்களுக்கு பெருமைகளை சேர்க்கும்.

## எண்ணற்ற நல்ல மாற்றங்கள் இல்லத்தை வந்தடையும் கடன்சுமை குறைந்து கவலைகள் தீர குருவழிபாடு உதவும்

இம்மாதம் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். தாய்வழி ஆதரவு பெருகும். அண்டை அயலார்களிடம் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் இனி மாறும். பிள்ளைகளின் நலன் கருதி ஒரு பெரும் தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்,**

### மாறும் குருவால் மனதிற்கு நிம்மதி!

**அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் கடக இராசி நேயர்களே!**

வசதி வாய்ப்போடு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று விரும்புவீர்கள். வருங்கால தலைமுறைகளுக்கு வழிகாட்டியாகவும் இருப்பீர்கள். தர்மசிந்தனையும் தாராள மனப்போக்கும் உங்களிடம் இருப்பதால் ஆத்மார்த்த நண்பர்கள் அதிகமாகவே உங்களுக்கிருப்பர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச உங்களுக்குத் தெரியாது. வெள்ளை மனம் கொண்ட உங்களுக்கு வேண்டியது புகழ் ஒன்றுதான்.

உங்களுக்கு இந்த வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது வளர்ச்சி கூடும் விதத்திலேயே இருக்கிறது. தளர்ச்சி அகலும். தன்னம்பிக்கையோடு பணிபுரியப் போகிறீர்கள். ஆயினும் மாதத் தொடக்கத்தில் சந்திரன் 8 இல் சஞ்சரித்து தொடக்க நாள் அமைகிறது.

## இம்மாதம் உங்கள் வாழ்க்கைப் பாதையில் புதிய மறுமலர்ச்சி தோன்றப் போகிறது...!

எனவே, இம்மாதத்தில் விரயங்களில் இருந்து விடுபடவிழிப்புணர்ச்சி தேவை.

செவ்வாயின் இயக்கம் சிறப்பாக இருக்கின்றது. மேலும் மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வை குடும்பஸ்தானத் தில் பதிகிறது. எனவே, குடுபத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். புதிய பொறுப்புகளும், புதிய பதவிகளும் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு வந்து சேரலாம்.

கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஒரு சில வாய்ப்புகள் கைநழுவிப் போகலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் கூடுதல் வாய்ப்புகள் வந்து சேரும்.

சனி வக்ர இயக்கத்தில் இருப்பது நன்மைதான். அர்த்தாஷ்டம சனி வக்ர கதியில் இருக்கும் பொழுது கெடுபலன்கள் பாதிக்குமேல் குறையலாம். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். படிப்படியாக முன்னேற பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்புக் கூடும். சுயஜாதக ரீதியாக தெசாபுத்திக்கு ஏற்ப தெய்வங்களை தேர்ந்தெடுத்து வழிபடுவது மேலும் நன்மைகளை வழங்கும்.

**இடப புதனின் சஞ்சாரம்!**

மே 15 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதியாக விளங்கும் புதன் இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயத்திற்கேற்ப வரவு வந்து கொண்டே இருக்கும். விரும்பிய பொருளை விரும்பிய நேரத்தில் வாங்கி மகிழ்வீர்கள். 3 க்கு அதிபதியாக சனி விளங்குவதால் சகோதர வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும். அன்னிய தேச வாய்ப்புகள்கூட எண்ணிப் பார்க்காத அளவிற்கு ஒரு சிலருக்கு வந்து சேரலாம். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

**இலாப குருவின் சஞ்சாரம்**

மே 17 ஆம் திகதி உங்கள் வாழ்க்கைப் பாதையில் புதிய மறுமலர்ச்சி தோன்றப் போகிறது. காரணம், குருப்பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை 10 இல் சஞ்சரித்து வந்த குருபகவான் 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மைதான். வரவு அதிகரிக்கும். வளர்ச்சி கூடும். உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். 6 க்கு அதிபதி 9 க்கு அதிபதியான குருபகவான் இலாபஸ்தானத்தில் சஞ்சரித்து 3, 5, 7 ஆகிய இடங்களில் பார்வையைப் பதிக்கிறார். எனவே, சகோதர வழியில் சகாயம். பிள்ளைகள் வழியில் முன்னேற்றமான தகவல்கள், கல்யாண பேச்சுக்கள் கை கூடும். ஆடை, ஆபரண சேர்க்கை ஆகியவை எதிர்பார்த்தபடி அமையும். ஆதாயம் அதிகரிக்கும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளுக்கும் நற்பலன்கள் கிடைக்கும்.

**மிதுன புதனும் இடப சுக்கிரனும்!**

மே 31 ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். விரயஸ்தானத்தில் விரயாதிபதி சஞ்சரிக்கும்பொழுது விரயங்கள் கூடலாம். ஏமாற்றங்களை சந்திக்காமல் இருக்க எதிலும் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். அதேநேரத்தில் ஜூன் 9 ஆம் திகதி சுக்கிரன் வக்ரம் பெறுகிறார். இது மிகுந்த நன்மையை வழங்கும். விற்ற சொத்துக்களில் வந்த வழக்குகள் விலகிச் செல்லும். உத்யோகஸ்தர்கள் விருப்ப ஓய்வில் வந்து தொழில் தொடங்க முன் வருவர்.

இம்மாதம் சந்திரபலம் குறைவதால் பவுர்ணமி வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

இம்மாதம் ஆரோக்கிய பாதிப்புகள் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. பூமியோகம் உண்டு. பொருளாதார முன்னேற்றம் கருதி உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் முடிவுசெய்வர். வாகன யோகம் உண்டு. வாரிசுகளின் நலன் கருதி சில முக்கிய முடிவுகளை எடுக்கப் போகிறீர்கள். மாதக் கடைசியில் சுக்கிரன் வக்ரம் பெறப் போவதால் சேமிப்பு உயரும். அன்னிய தேசத்தில் உள்ள உறவினர்களால் ஆச்சரியப்படத்தக்க செய்திகள் வந்து சேரும். முருகப்பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 04:- நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மருந்துகளினால் வேறு ஏதேனும் தீங்கு நேருமா?**

**பதில்:-** முறையான மருத்துவ ஆலோசனையின் பேரில் நாம் பயன்படுத்தும் மருந்துகளினால் எவ்வித தீங்கும் நேராது. மருந்துகள் நோயாளியின் உடலிலுள்ள செல்களிலிருந்து இன்சுலின் சுரக்க வைத்து அதன் மூலம் சீனி அளவைக் குறைக்கின்றன. இதன்மூலம் நோயாளி ஏனைய சாதாரண மனிதர்களைப் போல் நலமுடன் வாழ்கிறான்.

**கேள்வி 05:- வெந்தயம் நீரிழிவு நோயாளிக்கு எங்ஙனம் உதவுகிறது?**

**பதில்:-** வெந்தயத்தில் நார்ச்சத்து அதிகம் இருக்கின்றது. அது இரத்தத்தில் சீனி அளவை குறைக்கின்றது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவது போல் வெந்தயம் உடலிலுள்ள கொழுப்புச்சத்தையும் கட்டுப்படுத்துகிறது.

**கேள்வி 06:- வெந்தயத்தை எப்பொழுது சாப்பிட வேண்டும்?**

**பதில்:-** வெந்தயத்தை முந்தைய நாள் இரவு தண்ணீரில் ஊறவையுங்கள். காலையில் அவை நன்கு ஊறி பருத்துவிடும். அந்த வெந்தயத்தை அப்படியே வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.

**கேள்வி 07:- நீரிழிவு நோயாளிகள் சாப்பிடுவதற்கு முன்பு மருந்து சாப்பிட வேண்டுமா அல்லது சாப்பிட்ட பின்னர் மருந்து சாப்பிட வேண்டுமா?**

**பதில்:-** மருத்துவரின் ஆலோசனையின் படியே நீரிழிவு நோயாளிகள் மருந்து சாப்பிட வேண்டும் க்ளைஸிபேஜ், க்ளைகோமேட் மற்றும் டி.பி.ஐ. போன்ற மருந்துகளை உணவு சாப்பிட்ட பின்னரே சாப்பிட வேண்டும். டயோனில், டிமிக்ரான், யூக்ளூகான் போன்ற மருந்துகளை காலையிலும் இரவிலும் உணவு சாப்பிடுவதற்கு அரைமணி நேரம் முன்பு சாப்பிட வேண்டும். இரண்டு வேளை உணவிற்கு இடையில் க்ளூகோபே மாத்திரை சாப்பிட வேண்டும்.

**கேள்வி 08:- நீரிழிவு நோயாளிக்கு பாகற்காய் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது?**

**பதில்:-** நீரிழிவு நோயாளிகள் பொதுவாக பாகற்காய் சாறு பருகுகின்றனர். ஆனால், நீரிழிவு நோயை பாகற்காய் எந்த அடிப்படையில் கட்டுப்படுத்துகிறது என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. அதிலிருக்கும் கசப்புச் சுவையின் காரணமாக நோயாளிக்கு பசி எடுக்காது. இதன் காரணமாக இரத்தத்தில் சீனி அளவு குறைகிறது என்று நம்பப்படுகிறது.

**கேள்வி 09:- நீரிழிவு நோயாளிக்கு நெல்லிக்காய் மற்றும் மஞ்சள் தூள் பயன் தருமா?**

**பதில்:-** நெல்லிக்காய் ஆன்டியாக்ஸிடென்டாகச் செயல்புரிந்து நோயாளியை இதயநோய்களிலிருந்து பாதுகாக்கிறது. மஞ்சள் தூள் ஆன்ட்டிபயாட்டிக் ஆகும். அது நமது உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. இவற்றை ஒருவர், தான் சாப்பிடும் மருந்துகளுடன் சேர்த்து பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி 10:- நாட்டு மருந்துகளின் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியுமா?**

**பதில்:-** நீண்ட நாட்களாக நாட்டு மருந்துகள் சாப்பிட்டும் பயனின்றி இறுதியில் அலோபதி சிகிச்சையை (இன்சுலின் மற்றும் மாத்திரைகள்) மேற்கொண்டவர்கள் ஏராளம் இரு




08 க்கின்றனர். காரணம் நாட்டு மருந்துகளினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியாது. இப்படிப்பட்டவர்கள் மருத்துவரிடம் செல்லும் பொழுது நோயின் தாக்கத்தினால் ஏற்கனவே அவர்கள் இதய நோய், உயர் இரத்த அழுத்தம், பார்வைக் கோளாறு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருப்பர்.

டாக்டர்.A.K.ஜிங்கான்


**கேள்வி 11:- அக்குபஞ்சர் சிகிச்சையின் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியுமா?**

**பதில்:-** உடற்பயிற்சி, யோகாசனம், நடைப்பயிற்சி போன்றவற்றைச் செய்தால் அக்குபஞ்சர் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியும். இம்முறையில் பித்தளை அல்லது வேறு உலோகத்தினால் செய்யப்பட்ட ஊசிகளை நோயாளிகளின் உடலில் பல்வேறு பாகங்களில் குத்தி வைக்கின்றனர். இம்முறையை பயன்படுத்தும் நீரிழிவு நோய் நிபுணர்கள் நோயாளிகள் உடலில் பல்வேறு பாகங்களில் ஊசியினைக் குத்தி நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றனர். இருந்தாலும் நோயாளிகள் தங்கள் மருந்து மாத்திரைகளை தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.

(தொடரும்)

# கோடைகால நோய்களை விரட்ட வழிகள்

கோடை காலத்தில் உண்டாகும் அதிக உஷ்ணத்தால் மனிதர்களுக்கு பலவகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. கடுமையான வெப்பத்தைத் தாங்க முடியாமல் உடலில் பல நோய்கள் வெளிப்படுகின்றன. இனி குறைந்தது மூன்று மாதங்களுக்கு இந்த வெப்ப பாதிப்புக்களை சமாளித்தே ஆக வேண்டும். கோடைகளில் தாக்கும் வெப்ப நோய்கள் பற்றியும் அவை வராமல் தடுப்பது எப்படி? என்பது பற்றியும் பார்க்கலாம்.



**வியர்க்குரு...**

வெயில் ஏற ஏற உடலில் வியர்வை அதிகமாகச் சுரக்கும். அப்போது தோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளில் அழுக்கு சேர்ந்து அடைத்துக் கொள்ளும். அதனால் வியர்க்குரு வரும். வெயில் காலத்தில் தினமும் இரு வேளை குளித்தால் வியர்க்குரு வராது. குளித்து முடித்த பின் உடலைத் துடைத்து விட்டு வியர்க்குரு பவுடர், காலமின் லோஷன் அல்லது சந்தனத்தைப் பூசலாம்.

**வேனல் கட்டிகள்...**

தோலின் வழியாக வெளியேற வேண்டிய உப்பு, யூரியா போன்றவை வெளியேற முடியாமல் வியர்க்குருவில் அழுக்கு போல் தங்கி விடும். அப்போது அங்கு பக்ரீரியா தொற்றிக் கொள்ளும். உடனே அந்த இடம் வீங்கிப் புண்ணாகும். இதுதான் வேனல் கட்டி. இதற்கு நுண்ணுயிர் கொல்லி மருந்துகள், வலி நிவாரணி மருந்துகள், வெளிப்பூச்சு களிம்புகள் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். வேனல் கட்டி வருவதைத் தடுக்க, வெயிலில் அதிகமாக அலைவதைத் தவிர்க்கவும் நிறைய தண்ணீர் பருகவும்.

**காளான் படை...**

வியர்க்குருவில் பூஞ்சை அல்லது காளான் சேர்ந்து கொண்டால் அரிப்புடன் கூடிய படை, தேமல் தோன்றும். உள்ளாடைகளைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் காளான் படை நீங்கி விடும். படையைக் குணப்படுத்தும் களிம்புகளையும் மருந்துகளையும் பயன்படுத்தலாம்.

**வியர்வை நாற்றம்...**

அளவுக்கு அதிகமான வியர்வை காரணமாக உடலில் நாற்றமெடுக்கும். இதனைத் தவிர்க்க குளித்து முடிந்ததும் அலுமினியம் குளோரைடு அல்லது ஜிங்க் கலந்த நாற்றம் போக்கும் பவுடர்களை உடலில் பூசிக் கொள்ள வேண்டும்.

**வெப்பத் தளர்ச்சி...**

வெயிலின் ஆதிக்கம் அதிகரிக்கும் போது உடலின் வெப்பம் சிலருக்கு 106 டிகிரி பாரன்ஹீட் அளவிற்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் வளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர் தாகம் அதிகமாக இருக்கும். தலைவலி, வாந்தி,தலைச்சுற்றல், மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றும். அளவுக்கு மீறிய வெப்பத்தின் காரணமாக உடலின் உப்புகள் வெளியேறிவிடுவதால் இந்த தளர்ச்சி ஏற்படுகிறது.

**வெப்ப மயக்கம்...**

சுட்டெரிக்கும் வெயிலினால் தோலிலுள்ள இரத்த நாளங்கள் அதீதமாக விரிவடைந்து இடுப்புக்குக் கீழ் இரத்தம் தேங்குவதற்கு வழி செய்து விடுகிறது. இதனால் இதயத்திற்கு இரத்தம் வருவது குறைந்து விடுகிறது. இரத்த அழுத்தம் கீழிறங்குகிறது. மூளைக்குப் போதுமான இரத்தம் கிடைப்பதில்லை. உடனே தலைச் சுற்றல், மயக்கம் உண்டாகிறது. சில சமயங்களில் மரணம் கூட நிகழலாம்.

**ஒளி ஒவ்வாமை...**


சூரியனின் புற ஊதாக்கதிர்கள் ஒத்துக் கொள்ளாதவர்களுக்கு ஒளி ஒவ்வாமை உண்டாகும். இதனால் உடலில் வெயில் படும் இடங்கள் கறுத்து விடும். சிலருக்கு வெயிலின் உக்கிரம் தாங்க முடியாமல் தோல் கன்றி சிவந்து புண்ணாகி விடும். இதனை வெப்பப் புண்கள் என்கிறோம். இதனைத் தவிர்க்க வெயிலில் செல்லும் போது சன்ஸ்கிரீன் களிம்புகளைத் தோலில் தடவிக் கொள்ளலாம். மேலும் வெயிலில் அலைவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**நீர்க்கடுப்பு...**

கோடையில் சிறுநீர்க்கடுப்பு அதிக தொல்லை தரும். அளவுக்கு மீறி வியர்வை வெளியேறுதல் மற்றும் தேவையான அளவு தண்ணீர் குடிக்காதது இதற்கு காரணம். நிறைய தண்ணீர் குடித்தால் இந்த பிரச்சினை சரியாகி விடும் என்றாலும் அடிக்கடி நீர்க்கடுப்பு வந்தால் அதற்குரிய பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

**முதலுதவி**

வெப்ப மயக்கம் மற்றும் வெப்பத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக



முதலுதவி தர வேண்டியது முக்கியம். அவரைக் குளிர்ச்சியான இடத்திற்கு அப்புறப்படுத்துங்கள்.

மின் விசிறிக்குக் கீழ் படுக்க வைத்து ஆடைகளைத் தளர்த்தி காற்று உடல் முழுவதும் படும்படி செய்யுங்கள். அவரைச் சுற்றிக் கூட்டம் சேருவதைத் தவிர்க்கவும். தண்ணீரில் நனைத்த துணியால் உடலைத் துடைக்கவும். இது மட்டும் போதாது. அவருக்கு குளுக்கோஸ் மற்றும் தாதுக்கள் அடங்கிய சிரைவழி நீர்மங்களைச் செலுத்த வேண்டியதும் முக்கியம். ஆகையால் உடனடியாக மருத்துவரின் உதவி கிடைப்பதற்கும் வழி செய்ய வேண்டும்.

**நோய் தொற்றுக்கள்...**

கோடையில் சமைத்த உணவுகள் விரைவில் கெட்டு விடும். அவற்றில் நோய் உருவாக்கும் கிருமிகள் அதிகமாக இருக்கும். இந்த உணவுகளை உண்பதால் பலருக்கு கோடை காலத்தில் வாந்தி, வயிற்றுப் போக்கு சீதபேதி,கொலரா, மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வரும். ஆகையால் கோடை காலத்தில் சமைத்த உணவுகளை உடனுக்குடன் பயன்படுத்தி விட வேண்டும். தண்ணீரைக் காய்ச்சி ஆற வைத்துக் குடிக்க வேண்டும். வயிற்றுப் போக்கின் ஆரம்ப நிலையிலேயே எலெக்ட்ரால் போன்ற பவுடர்களைத் தண்ணீரில் கரைத்துச் சாப்பிட வேண்டும்.

**கோடையை வெல்வது எப்படி...**

கோடை வெயிலைச் சமாளிக்கவும் வெப்ப நோய்கள் வராமல் தடுக்கவும் அதிகமாகத் தண்ணீர் குடியுங்கள். சாதாரணமாக தினமும் 2 லீற்றர் தண்ணீர் குடிப்பது வழக்கம். கோடையில் குறைந்தது 3 இலிருந்து 4 லீற்றர் வரை குடிக்க வேண்டும். காய்ச்சி ஆற வைத்த தண்ணீரை ஒரு மண்பானையில் ஊற்றி வைத்து ஜில்லென்று குடிக்கலாம். கோப்பி மற்றும் தேநீர் குடிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

வாயு நிரப்பட்ட செயற்கை மென் பானங்களைக் குடிப்பதை விட இளநீர், நீர் மோர், பதநீர், பழச்சாறுகள் ஆகிய இயற்கை பானங்கள் குடிப்பதை அதிகப்படுத்துங்கள். எலுமிச்சைச் சாற்றில் உப்பு அல்லது சீனி சேர்த்து சாப்பிடுவது நல்லது. தர்ப்பூசணி, நுங்கு, வெள்ளரி, கொய்யா, பப்பாளி, சாத்துக்குடி, ஓரேஞ்சு, திராட்சை, பலாப்பழம், அன்னாசி போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையோ பழச்சாறுகளையோ அடிக்கடி சாப்பிடுங்கள்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 136

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு


பிரான்சுப்படைகளின் அணிவகுப்பு

நேச நாட்டுப்பயணப் படைகளின் பிரதான படைத்தளபதியாக ஜெனரல் ஐசன் ஹோவர் இருந்தார்; இவரது துணைவர்களாக தரைப்படைக்கு ஜெனரல் மொண்கமேரியும் கடற் படைச் சக்திகளுக்கு அட்மிரல் ராம்சேயும் வான்படைக்கு மார்ஷல் தேட்டரும் இருந்தனர்.


80 கி.மீ. நீளமுள்ள போர்முனையில் ஸேனா குறுங்குடாவின் கரையோரத்தில் கடல்மற்றும் வான் இறக்கு படையினரை இறக்கி, 20-வது நாளன்று 100கி.மீ. நீளமும் 100-110 கி.மீ. ஆழமுடைய தாக்குமுனையைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டது.

படைஇறக்கு பிரதேசமானது மேற்கு (அமெரிக்கா) மண்டலம் என்றும் கிழக்கு (பிரிட்டிஷ்) மண்டலம் என்றும் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு மண்டலம் இருபகுதிகளையும் கிழக்கு மண்டலம் மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரே நேரத்தில் பலப்படுத்தப்பட்ட ஒரு காலாட்படை டிவிஷன் இறக்கப்பட்டது.

நடவடிக்கைக்கான துருப்புகளின் அணிவகுப்பு இரண்டு படை வரிசைகளை உள்ளடக்கியிருந்தது. முதல் படை வரிசையில் 1-வது அமெரிக்க, 2-வது பிரிட்டிஷ்படைகளும் இரண்டாவது படை வரிசையில் 1-வது கனடா படையும் நின்றன.

கடல் படையிறக்கத்திற்கு முன்பு படையிறக்குப் பிரதேசத்தின் பக்கவாட்டுப்பகுதிகளில் கரையிலிருந்து 10-16 கி.மீ. ஆழத்திற்கு வான் இறக்குபடை டிவிஷன்களை (2அமெரிக்க, 1பிரிட்டிஷ் டிவிஷன் கள்) தரையிறக்கவேண்டியிருந்தது. சாலை மையங்கள், பாலங்கள், ஆறு களைக் கடக்கும் இடங்களைக் கைப்பற்றி எதிரியின் சேமப்படைகள் கரையை அணுகாதவாறு தடுப்பதும் தான் இதன் நோக்கமாயிருந்தது.

கடற்படைச் சக்திகள் இரண்டு குவாட்ரன்களாக இருந்தன. இவற்றில் ஒவ்வொன்றும் தன்னுடைய மண்டலத்தில் படையிறக்கத்துக்கு ஆதரவு அளித்தது. ஒவ்வொரு டிவிஷனையும் இறக்குவதற்காகத் தனியான கடற்படை யூனிட்டுகள் தோற்றுவிக்கப் பட்டன.


நார்மாண்டி விமானப்படை விமானிகளுக்கு சோவியத் யூனியனில் நினைவாலயம்

பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் படையிறக்கத்திற்கு 90 நாட்கள் முன்னதாக தொடங்கியது. வடக்கு பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, நெதர்லாந்திலிருந்த தொழிற்துறை மற்றும் தற்காப்பு அமைப்புகள் விண்ணிலிருந்து தாக்குதலுக்குள்ளாக்கப் பட்டன. படையிறக்க நாள் நெருங்க நெருங்க நேசநாட்டு விமானப் படையின் குண்டுவீச்சுகள் அதிகமாயின, வலுவத்தன. மே, இறுதியில் வடக்கு பிரான்சில் இருப்புப் பாதை போக்குவரத்து முழுவதும் சீர்குலைக்கப்பட்டது. ஸேனா ஆற்று முகத்துவரத்திலிருந்து பாரிஸ்வரை ஆற்றுப் பாலங்கள் எல்லாம் தகர்க்கப்பட்டன. ஜேர்மனியர்களின் விமானத் தளங்களுக்கும் ராடார் சாதனங்களுக்கும் பெரும்சேதம் ஏற்படுத்தப்பட்டது. இவை அனைத்தும் நேசநாட்டுப் படையிறக்கத்தை முறியடிக்கையில் பாசிச ஜேர்மனியத்துருப்புகளை பெரிதும் பாதித்தன.

தீடீரென தாக்குதலைத் தொடுக்கும் பொருட்டு நேச நாட்டுப்படைத் தலைமை உருமாற்றத்திற்காகவும் எதிரிக்கு தவறான தகவலை அளிக்கும் பொருட்டும் பரவலாகப் பல்வேறு விதமான நடவடிக்கைளை மேற்கொண்டது. உதாரணமாக திட்டவட்டமான எண்ணிக்கையில் மட்டுமே ஆட்கள் நடவடிக்கையை திட்டமிடுவதில் ஈடுபடுத்தப்பட்டனர். உண்மையான படையிறக்கப் பிரதேசம் குறித்து எதிரியைக் குழப்பத்தில் ஆழத்துவதற்காக பாடெகாலேயின் வழியாகப் புகுவது மாதிரிப் படையிறக்கம் நடைபெற விருந்த நார்மாண்டி கரையைவிட அதிமாக பாடெகாலே கரையில் நேசநாட்டு விமானப்படை தாக்குதல்களை நடத்தியது. பிரிட்டனின் தென்கிழக்கு துறைமுகங்களில் படையிறக்கக் கப்பல்களின் மாதிரிகள் கட்டப்பட்டன. பிரெஞ்சுக் கரையிலிருந்து பார்க்கத்தக்க பொய்யான படைக்குவிப்பு வட்டங்கள் அமைக்கப்பட்டன. பிரிட்டினில் இருந்த இராஜ தந்திரப்பிரதிநிதிகள் (அமெரிக்க, சோவியத் பிரதிநிதிகளைத்தவிர) நம் நாட்டுடன் கண்காணிப்பற்ற கடிதத் தொடர்பு கொள்வதும் இவர்கள் பிரிட்டனை விட்டு வெளியேறுவதும் தடைசெய்யப் பட்டிருந்தன.

படையிறக்கத்திற்கு முந்திய நாளன்று இரவு பிரிட்டஷ் கடற் படையின் 18 கப்பல்கள் குண்டுவீச்சு விமானங்களின் ஆதரவோடு காவ்ர், புலோன், செர்பூ ஆகியவற்றுக்கு வடகிழக்கே ஏமாற்று நடவடிக்கைகள மேற்கொண்டனர். கரையோரமாகக் கப்பல்கள் நடமாடிக் கொண்டிருந்த போது விமானங்கள் உலோகத் தகடுகளை வீசிக்கொண்டிருந்தன. பாடெகாலே ஜலசந்தி பிரதேசத்தில் புகுவதற்காக நேசநாட்டுத் துருப்புகள் பெருமளவில் குவிக்கப்படுவதாக ஜேர்மனிய ராடர் நிலையங்கள் இதைப்பதிவு செய்தன.


பரிபூரண பொருளாயத- தொழில் நுட்ப சப்ளைக்கு வகை செய்தது, ஒவொர் லோட் நடவடிக்கைத் தயாரிப்பின் சிறப்பம்சமாகும். உதாரணமாக இரண்டு செயற்கைத் துறைமுகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, ஜலசந்தி வழியாக எடுத்துச் செல்லப் பட்டு பின்னால் லேனாகுறுங்குடா கரையில் ஒன்று சேர்க்கப்பட்டன. இது தவிர 70 இற்கும் மேற்பட்ட பழைய கப்பல்கள், படகுகளை மூழ்கடித்து 5 செயற்கைக் கப்பற் துறைகளை ஏற்படுத்தவும் ஜல சந்தியின் அடிப்பகுதி மூலம் எண்ணெய்க் குழாய்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டது.

எல்லா சரக்குகளும் கப்பல்களில் ஏற்றுவதற்கு முற்றிலுமாகத் தயார் படுத்தப்பட்டு காற்று புகாதவாறு அடைக்கப்பட்டிருந்தன.

படையிறக்கத்திற்காக துருப்புகள் விசேட முகாம்களில் தயார்படுத்தப்பட்டன. ஏராளமான பயிற்சிகளின் போது கப்பல்களில் ஏறுவதற்கும் வசதிகளற்ற கரையில் இறக்கவும் ஆதாரநிலையங்களின்மீது திடீர்த் தாக்குதலைத்தொடக்கவும் மற்ற வகைப் படைப்பிரிவுகளுடன் ஒத்திசைந்து செயற்படவும் பயிற்சி அளிக்கப்பட்டது.

(தொடரும்)

போர்முனைக்கு நகரும் டாங்கிகள்




தாக்கி எரிக்கப்பட்டிருக்கும் ஜேர்மனிய விமானங்கள்

# தென்கிழக்கு பல்கலையில் விரைவில் பொறியியற்பீடம்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் பொறியியல் பீடம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 7 ஆவது பொது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

1995 இல் பல்கலைக்கழகக் கல்லூரியாக மறைந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிசின் ஸ்தாபகத் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் முயற்சியினால் றிசாட் பத்திரன கல்வியமைச்சராக இருந்த காலத்தில் இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

சமூக ஒருமைப்பாட்டையும் சமாதான விழுமியங்களையும் கட்டியெழுப்பும் வகையில் செயற்படுகின்ற இப்பல்கலைக்கழகமானது தேசிய ரீதியில் முன்னணி வகிக்கின்றது.

இப்பல்கலைக்கழகத்தை மிகத்தரம் வாய்ந்த ஒரு கலாசாலையாக முன்னேற்றுவதற்கு தற்போதைய உபவேந்தர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார். அவரது முயற்சியின் விளைவாகவே இங்கு விரைவில் பொறியியல் பீடம் உருவாகவுள்ளது.

உலகமயமாக்கம் காரணமாக ஒவ்வொரு துறைகளிலும் போட்டிகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த சவால் மிக்க உலக செயற்பாடுகளுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களினதும் பங்கு மிகப் பெறுமதிவாய்ந்தவை. இவை பல துறைகளிலும் பிரசித்திபெற்ற அறிவாளிகளை உருவாக்குகின்றன.

இன்று தெற்காசிய நாடுகளின் பொருளாதாரம், வெகுவாக வளர்ச்சி கண்டு வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக ஆசிய நாடு



களின், அபிவிருத்தியடைந்த நாடுகளின் முன்னேற்றத்தை குறிப்பிடலாம். இதற்கு அந் நாடுகளினது உயர் கல்வித்துறை பெரும் பங்காற்றி வருவதை நாம் காண்கின்றோம்.

இவ்விழாவில் அமைச்சர் ஏ.எல். எம். அதாவுல்லா, பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம். முகம்மது இஸ்மாயில், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்தின, பதிவாளர் எச். அப்துல் சத்தார், நிதியாளர் குலாம் றசீத் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பிரதேச அரசியல் பிரமுகர்கள், திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (2-7)

## துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டோர் கைது

(கொழும்பு)

காலி–ஹிக்கடுவை பகுதி ஹோட்டல் ஒன்றில் 17 வயது தமிழ் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இரு சவுதி அரேபிய பிரஜைகளும் பெண்களை பணத்திற்கு விற்ற குற்றத்தில் இலங்கைப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவை பொலிஸாரால் இவர்கள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண் மருதானை பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் மட்டக்களப்பு ஒந்தாச்சி மடம் பகுதியைச் சேர்ந்தவராவார். சந்தேகநபர்கள் காலி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (2-7)

## மாகாணசபைத் தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும்; பவ்ரல் அமைப்பு

மாகாண சபைத் தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்பட்ட வேண்டுமென பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கட்டம் கட்டமாக தேர்தல் நடத்தப்படுவதனை தமது அமைப்பு எதிர்ப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாகாண சபையாக தேர்தல்களை நடத்தாது எட்டு மாகாண சபைளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் ஒரே நாளில் நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக தேர்தல் நடத்துவதனால் பொது மக்கள் பணம் பாரிய அளவில் விரயமாவதாக குற்றம் சுமத்தியுள்ளனர். மேலும் இவ்வாறு தேர்தல்களை நடத்துவதன் மூலம் மக்களின் உண்மையான விருப்ப த்தை தெரிந்துகொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்தரப்பினர் கூடுதல் நன்மைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தேர்தல் நடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தம்புள்ள புனித பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய கோத்தபாயவிடம் ஒப்படைப்பு

### அச்சத்தில் முஸ்லிம் மக்கள்

தம்புள்ள பள்ளிவாசல் விவகார சர்ச்சை தணிந்து கொண்டிருக்கும நிலையில் தம்புள்ள புனித பிரதேச எல்லையை மீள நிர்ணயித்து அபிவிருத்தி செய்வதற்காக அப்பிரதேசம் இலங்கை படைத்துறை அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இலங்கை புத்தசாசன அமைச்சின் செயலாளரின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை தம்புள்ள ரன்கிரிய விகாரையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அஸ்கிரிய மகாநாயக்க தேரரே சர்ச்சைக்குரிய தம்புள்ள பிரதேசத்தை கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை புத்தசாசன அமைச்சின் செயலாளர், மாத்தளை மாவட்ட அரச அதிபர் மற்றும் சிறி சுமங்கல தேரர் உள்ளிட்டோரால் இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கமைய படைத்துறைச் செயலாளர் கோத்தயபாய ராஜபக்ஷவின் கீழ் இருக்கின்ற நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் தம்புள்ள பிரதேசத்தை ஒப்படைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் தற்போது கூறியுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்காக விரைவில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் அதனைத் தொடர்ந்து புனித பிரதேச எல்லையை மீள நிர்ணயம் செய்து அப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் இலங்கை புத்தசாசன அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவின் காரணமாக தம்புள்ள பள்ளிவாசலை இடிப்பதற்கான நடவடிக்கை மீண்டும் எடுக்கப்படுமோ என்ற அச்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. (2-7)

## மேல்கொத்மலை வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்றையதினம் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் தலவாக்கலை, திம்புலபத்தன, பூண்டுலோயா, கொத்மலை ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் விழிப்பாக இருப்பது அவசியம் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நுவரெலிய மாவட்ட இணைப்பாளர் இரந்த ஹேமவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரையும் இந்நீர் தேக்கத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டதாக அவர் கூறினார்.

இந்நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளை பரிசோதிப்பதற்காகவே திறந்துவிடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7)

## மதுப்பாவனையிலிருந்து 300 கிராமங்கள் முற்றாக நீங்கின

(கொழும்பு)

மதுவுக்கு முற்றுப்புள்ளி திட்டத்தின்கீழ் 300 கிராமங்கள் மதுப்பாவனையில் இருந்து முற்றாக நீங்கிய கிராமங்களாக மாறியுள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் வசந்த ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார். இவ் வருடத்தில் மேலும் 300 கிராமங்களை மதுப்பாவனையில் இருந்து நீங்கிய கிராமங்களாக மாற்றப்போவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சட்டவிரோத மதுப்பாவனை வியாபாரம் போன்றவற்றுக்கு எதிராகச் சட்டத்தினால் மட்டும் தீர்வு காண முடியாது. சட்டத்துக்கு அப்பால் சென்று செயற்படும் ஒரு வேலைத் திட்டம் அமுலாக்கப்படவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மதுவரித்திணைக்களத்துக்கு 100 ஆண்டுகள் நிறைவாவதை முன்னிட்டு கம்பளை விகுலவத்தை விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (2-7)

## டெங்கு பரவும் சூழல்; 18 பாடசாலை அதிபர்களுக்கு எதிராக வழக்கு

டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள 18 பாடசாலைகளின் அதிபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொரளையிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மேமாதத்தில் டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பாக கம்பஹா மாவட்டத்தில் நடத்திய ஆய்வின் அடிப்படையிலேயே இப் பாடசாலைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சுகாதார அமைச்சு முடிபு செய்துள்ளது.

மேமாதத்தில் டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பாக கம்பஹா மாவட்டத்தில் 25 தனியார் நிறுவனங்களும் 27 பாடசாலைகளும் 100 வீடுகளும் பரிசோதிக்கப்பட்டன. இவற்றில் 18 பாடசாலைகளும் 59 வீடுகளும் டெங்கு நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்கு ஏற்ற சூழலைக் கொண்டிருந்தது கண்டறியப்பட்டிருக்கின்றது.

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்ற சூழலைக் கொண்டிருந்த இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் விரிவான அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்தும் கூட அவற்றைச் சிறிதளவேனும் பொருட்படுத்தாமல் சிலர் நடந்து கொள்வது கவலை அளிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இப்படியானவர்களுக்கு எதிராக வேறுபாடு பாராமல் கடும்சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் கூறியுள்ளார். அதன் அடிப்படையிலேயே இவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது. (2-7)

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் உயர்மட்டக் கூட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் உண்ணா விரதமிருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவது தொடர்பில் அமைச்சர்களான சந்திரசிறி கஜதீர, ரவூப் ஹக்கீம், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளும் உயர்மட்ட கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாக அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு இன்றைய தினம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நடைபெறும் சந்திப்பின் போது தமிழ் அரசியல் கைதிகளது வழக்குகளை உடன் விசாரணைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் ஆராயப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

நாட்டின் ஐந்து சிறைச்சாலைகளில் 550 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். இவர்களுள் அநேக சிறைக் கைதிகள் தமது வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தக்கோரி உண்ணாவிரதம் மேற்கொள்ள ஆரம்பித்ததையடுத்து இவ்விடயம் தொடர்பில் சிறைச்சாலைகள் அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நீதியமைச்சுடன் சேர்ந்து இன்று தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து உரிய தீர்வொன்றினை முன் வைப்பார்களெனவும் அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் மற்றும் கொழும்பு மகசின் சிறைச்சாலைகளின் அரசியல் கைதிகளுக்கு விரைவில் உரிய தீர்மானம் பெற்றுத்தரப்படுமென்ற உறுதிமொழியையடுத்து தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ள நிலையில் கொழும்பு விளக்கமறியல் தமிழ் அரசியல் கைதிகள் மாத்திரமே நேற்று முன் தினம் மாலை வரை தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

இன்று நடைபெறும் உயர்மட்ட பேச்சுவார்த்தையின் பெறுபேற்றை பொறுத்தே தாம் உண்ணா விரதத்தை கைவிடுவதா இல்லையா என தீர்மானிக்கவுள்ளதாக மேற்படி கைதிகள் தெரிவித்துள்ளனர். (2-7)

# பிரதியமைச்சு பதவி வேண்டாம்

## நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்கு பிரதியமைச்சர் பதவி வேண்டாம் என்று தமது தந்தையான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறிவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள செய்தித்தாள் ஒன்றுக்கு கருத்துரைத்த அவர் அமைச்சு பதவிகளை கொண்டு இதுவரை தாம் மக்களுக்கு சேவைகளை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்த நிலையில் கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.திகாம்பரம், பிரபா கணேசன் உட்பட பலருக்கு பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-7)




★ கி.மு.334- மகா அலெக்சாண்டர் தலைமையில் கிரேக்க இராணுவம் பேசியாவின் மூன்றாம் டாரியஸ் மன்னனைத் தோற்கடித்தனர்.

★ 1809-வியென்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.

★ 1834-இலங்கையில் சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.

★ 1840-நியூ சவுத் வேல்சுக்கு பிரித்தானியக் குற்றவாளிகளை நாடு கடத்துதல் நிறுத்தப்பட்டது.

★ 1844-பாரசீக மதகுரு பாப் தனது பாபிசம் என்ற தனது மதக் கொள்கையை வெளியிட்டார். இவரே பஹாய் சமயத்தைத் தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.

★ 1906-ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

★ 1915-ஐக்கிய அமெரிக்காவில் லாசன் முனை வெடித்தது.

★ 1915-ஸ்கொட்லாந்தில் ஐந்து தொடருந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் 227 பேர் உயிரிழந்தனர். 246 பேர் காயமடைந்தனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: மெக்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.

★ 1958-இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1960-தெற்கு சிலியில் நிகழ்ந்த 9.5 அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதுவே இதுவரையில் பதியப்பட்ட அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகும்.

★ 1967-பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் கடைத் தொகுதி ஒன்று தீப்பிடித்ததில் 323 பேர் உயிரிழந்தனர். 150 பேர் காயமடைந்தனர்.

★ 1968-அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஸ்கோர்ப்பியன் மூழ்கியதில் 99 பேர் உயிரிழந்தனர்.

★ 1972-இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன் ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.

★ 1990-வடக்கு யேமன் மற்றும் தெற்கு யேமன் ஆகியன இணைந்து யேமன் குடியரசு ஆகியது.

★ 1990-விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.

★ 2004-நெப்ராஸ்காவில் இடம்பெற்ற சூறாவளியினால் ஹலாம் நகரம் முற்றிலும் அழிந்தது.

**பிறப்பு**

★ 1859-சேர் ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் எழுத்தாளர் (இ.1930)

**இறப்பு**

★ 1885-விக்டர் ஹியூகோ, பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1802)

**சிறப்பு நாட்கள்**

★ World Biodiversity Day

★ யேமன் - தேசிய தினம்

★ இலங்கை- தேசிய வீரர்கள் தினம், குடியரசு தினம் (1972)

# விடுதலைப் புலிகளை தோற்கடித்தது எப்படி? இந்திய மாணவர்களுக்கு கற்பிக்கவுள்ளார்

## மஹிந்த பாலசூரிய

(கொழும்பு)

இலங்கையில் முப்பதாண்டுகாலம் போரை நடத்திய விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது எவ்வாறு என்பதனை இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய பாடம் நடத்தவுள்ளார்.

வடோதராவில் உள்ள மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கே முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய இந்தப் பாடத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு இவர் தீவிரவாத முறியடிப்பு மற்றும் அனைத்துலக விவகாரங்கள் குறித்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களை கற்பிக்கவுள்ளார். இதன்போது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த தனது அனுபவங்கள் குறித்தே அவர் முக்கிய கவனம் செலுத்துவார்.

மஹிந்த பாலசூரிய இந்தப் பல்கலைக்கழகத்தில் 1976 ஆம் ஆண்டில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ் பேர்க் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான பீடத்தில் கலாநிதிப் பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார்.

கலாநிதிப் பட்டத்துக்காக தான் எழுதிய ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாக வைத்து மஹிந்த பாலசூரிய விடுதலைப் புலிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற தலைப்பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)



துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் மு/மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் பங்கேற்ற சிந்துநடைக் கூத்து கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் ஆகியவற்றில் முதலாம் இடத்தைப் பெற்றது. இவ்வணியினரை நெறிப்படுத்திய ஆசிரியையுடன் பங்கேற்ற மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-மல்லாவிச்செய்தியாளர்)

# இலங்கைப் போர்க்குற்றக் கதைகளை வெளிப்படுத்துவதில் ஊடகர்கள் தவறிவிட்டனர்

இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்றாவது ஆண்டு நிறைவாகியுள்ளது. நான் அங்கு கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். ஆனால், அவ்வாறு கொல்லப்பட்ட மக்கள் எத்தனைபேர் என்பது எனக்குத் தெரியாது.

இவ்வாறு போரின் போது 7000 தொடக்கம் 1இலட்சத்து 47 ஆயிரம் வரை கொல்லப்பட்டதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது உண்மையில் அதிர்ச்சி தரத்தக்க எண்ணிக்கை வித்தியாசமாகக் காணப்படுகின்றது.

செய்மதிகள் மற்றும் இணையத்தளச் செய்திகள் போன்றவற்றின் ஊடாக இலங்கைப் போரில் கொல்லப்பட்ட மக்கள் எத்தனை பேர் என்பதை தெளிவாக வரையறுப்பதென்பது எவ்வாறு சாத்தியமாகும்.

ஊடாகவியலாளர் என்ற வகையில் இது தொடர்பான உண்மையை நெருங்குவதில் நாம் தோல்வியடைந்துவிட்டோம். ஒருபுறம் இலங்கை அரசாங்கமானது 2009 இல் மேற்கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கையை மனித உயிர்களைக் மீட்டெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என பிரகடனப்படுத்திய அதேவேளையில், மறுபுறத்தில், இது ஒரு இனப்படுகொலை என பெரும்பாலான தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

இலங்கை யுத்தமானது தீவிரமடைந்திருந்த 2009காலப் பகுதியில், ஊடகவியலாளர்கள் போர்வலையத்திற்குள் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால், இலங்கையில் நடந்த யுத்தமானது சாட்சியற்ற யுத்தம் என ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. இருப்பினும் இதில் அவ்வளவு உண்மையில்லை.

இலங்கையில் யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்தபோது, வன்னி யுத்த வலயத்துக்குள் 60 கத்தோலிக்க மதகுருமார் மற்றும் அருட்சகோதரிகள் போன்றோரும், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 240 உள்ளூர் பணியாளர்களும், ஐந்து வைத்தியர்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய அரசாங்கத்தின் கீழ் பணிபுரியும் தமிழ் அதிகாரிகளும் அகப்பட்டிருந்தனர். இவர்கள் உத்தியோக ரீதியாக அவர்களது தொழில் சார் தகமைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

யுத்தத்திலிருந்து தப்பிப் பழைத்தவர்கள் என அனைவரையும் குறிப்பிடமுடியாது. ஏனெனில் பெரும்பாலான மக்கள் யுத்தத்திலிருந்து உயிர் தப்பியிருந்தாலும்கூட அவர்கள் உளத்தாக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் விரக்தியடைந்து வாழ்கின்றனர். யுத்தத்தின் இறுதி மாதங்களில், நரக வாழ்க்கை வாழ்ந்த இந்த மக்கள் சாவின்விளிம்புவரை சென்றுவிட்டு வந்தவர்களாவர். எடுத்துக்காட்டாக, ஒருவருடன் கதைத்துக்கொண்டிருக்கும் அடுத்த நிமிடம் அவரது உயிர் பறிக்கப்பட்ட பல

**நன்றி: இணையம்**

சம்பவங்கள் வன்னியின் யுத்த வலயத்திற்குள் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான கதைகள் சனல்-4 தொலைக்காட்சி சேவை தவிர பெரும்பாலான ஊடகங்களில் முக்கியப் படுத்தப்படவில்லை. மிக ஒடுங்கிய கரையோர, சதுப்பு நிலப்பகுதியில் இறுதிக்கட்ட யுத்தம் தீவிரமாக இடம் பெற்றிருந்தது. இது மிகப் பயங்கரமான யுத்த அனுபவமாகும். இறுதி யுத்தத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட மக்களைப் பொறுத்தளவில் தங்கத்தைவிட பால்மாவுக்கான தேவை அதிகமாக இருந்தது. அத்துடன் பெண்கள் தமது திருமண நாள் சேலையை வெட்டி அதனைக் கொண்டு பதுங்குகுழி அமைப்பதற்கான பைகளைத் தயாரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். சிறுவர் பட்டினிச்சாவுக்கு முகங்கொடுத்தனர்.

மக்கள் தமது அன்புக்குரியவர்களின் இறந்த உடல்களை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காப்பாற்றிய வைத்தியர் ஒருவர், யுத்தத்தின் இறுதி நாளின் போது மரம் ஒன்றின் கீழ் 150



நோயளிகளை அப்படியே விட்டுவிட்டு வந்திருந்தார். இந்த நினைவை, இவ்வாறான பயங்கரமான சம்பவத்தை மனிதில் தாங்கியவாறு இவ்வைத்தியர் வாழ்கின்றார். அத்துடன் இவ்வைத்தியர் நீண்ட நேரம் குருதியைப் பார்க்க விரும்பவில்லை. அவரால் அது முடியவில்லை. இதனால், சத்திர சிகிச்சை செய்வதற்கு இவரால் முன்வர முடியவில்லை.

அன்புக்குரிய பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன்சேர்ந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் நடந்துள்ளன. தமது குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக சாவதை ஏற்றுக்கொண்டு வாழமுடியாத இந்தக் குடும்பத்தவர்கள் ஒரேநேரத்தில் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் மனங்களை உருக்குகின்றன. வயிற்றிலிருந்த குழந்தை ஒன்று பிறக்கும்போது தனது சிறிய காலில் துப்பாக்கி ரவை துளைத்தவாறு பிறந்த சம்பவமும் வன்னியில் இடம்பெற்றிருந்தது. தற்காலிகமாக அமைக்கப்பட்ட வைத்தியசாலைகளில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்து பாலூட்டும் தாய்மார்கள் தமது பிள்ளைகளுக்கு தமது வாழ்வின் இறுதிப்பரிசாக தாம் வழங்கும் தாய்ப்பால் தான் இருக்கும் எனத் தெரிந்துகொண்டு கடும் பிரயத்தனத்தின் மத்தியில் பாலூட்டிய சம்பவங்களும் அங்கு நிகழ்ந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான மீறல்களுக்கான சாட்சியங்களை ஐ.நா. வல்லுனர் குழுவின் விசாரணை அறிக்கை உள்ளடக்கியுள்ளது. ஆனால், இவ்வறிக்கையை பெரும்பாலான ஊடகவியலாளர்கள் முழுமையாக வாசிக்கவில்லை.

பாதுகாப்பு வலயம் என இலங்கை அரசாங்கம் நீண்ட காலமாக அறிவித்து வந்த போதிலும், இவ்வலயங்களில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைகள் மீது ஆறுமாதங்களில் 30 தாக்குதல்கள் வரை இடம் பெற்றதாக மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் சுட்டி நிற்கின்றன. இவை அனைத்தும் தற்காலிகமாக நடந்தவை என்பதை நம்புவது கடினமானதாகும்.

அண்மையில் புறொன்ற்லைன் கிளப்பில் இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விவாதத்தை 844,042 பேர் வரை இலங்கைப் படையானது கட்டுப்பட்டுடன் போரில் ஈடுபட்டதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் புகழ்ந்துரைத்திருப்பதாக இலங்கையில் மீளிணக்கப்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதை நான் செவிமடுத்திருந்தேன். ஆனால், அதே அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கம், தனது சகபணியாளர் ஒருவர் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது இலங்கைப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குள் அகப்பட்டுக்கொண்டதாக அறிவித்திருந்தது.

உலக நாடுகள் பலவற்றில் இடம் பெறும் பல யுத்தங்களைப்பார்த்துள்ள போதிலும், பெருமளவான மக்கள் பாதிக்கப்படக் காரணமான யுத்தத்தை இலங்கையிலேயே பார்த்துள்ளதாக,

## பி.பி.சி.செய்தி நிறவனத்தின் முன்னாள் ஊடகவியலாளர் ஃபிரான்சிஸ் ஹரிசன், அண்மையில் எழுதிய முள்ளி வாய்க் கால் இனப்படுகொலை தொடர்பான கட்டுரைப்பகுதியின் தமிழாக்கம்

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்திருந்தது. *கற்பனை செய்ய முடியாத மனிதப் பேரழிவு* என இலங்கையில் இடம் பெற்ற யுத்த அழிவு அழைக்கப்படுகின்றது.

தாம் செத்துக் கொண்டிருக்கும் போது தம்மைப் பாதுகாக்காது கைவிட்டதாக அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர். உண்மையில் மனித உயிர்களைப்பாதுகாத்தல் என்கின்ற தனது கடமையை ஐக்கிய நாடுகள் சபை செய்யத் தவறியிருந்தது என்பது உண்மையாகும்.

யுத்த நிலை தொடர்பாக உண்மைச் செய்திகளை வெளிப்படுத்தி வந்த உதவிப் பணியாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். உண்மையை வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

சிரியாவுக்குள் ஊடகவியலாளர் நுழைந்துகொண்டது போன்று விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் நுழைவதற்கு ஊடகவியலாளர்கள் முன்வரவில்லை. ஜனவரி 2009 நடுப்பகுதி வரை இலங்கையின் யுத்த முன்னணி நிலைகளின் ஊடாக பேரூந்து ஒன்று போக்குவரத்தில் ஈடுபட்ட போதிலும்கூட, ஊடகவியலாளர்கள் அங்கு செல்வதில் ஆர்வங்காட்டவில்லை.

இறுதிக்கட்ட யுத்தம் ஆரம்பித்த போது, ஸ்கொட்லாந்து, அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷத்து ஐ.நா பணியாளர்கள் அதற்குச் சாட்சியமாக. இருந்தபோதும் அவர்களின் சாட்சியங்கள் வெளிவரவில்லை. பிரித்தானியாவில் நடைபெறும் பொதுத் தேர்தல்களில் அங்கு வாழும் தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகள் தொடர்பாக பிரித்தானிய அரசியல்வாதிகள் பாராட்டுவதை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள், 2001-2008 வரையான காலப் பகுதியில் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட பிரித்தானியாவானது இலங்கைக்கு பெருமளவான ஆயுத இறக்குமதி உரிமங்களை வழங்கியிருந்தது தொடர்பாக தயாரிக்கப்பட்ட சுவீடனின் ஆய்வறிக்கையை வாசிக்கத் தவறிவிட்டனர்.

இலங்கையில் 4 இலட்சம் வரையிலான தமிழ் மக்கள் யுத்த வலயத்துக்குள் அகப்பட்டிருந்தபோது, 1500 வரையான மக்கள் மட்டுமே கொல்லப்பட்ட காசா சம்பவத்தை முக்கியத்துவப்படுத்தி அனைத்துல[illegible] ஊடகங்கள் செய்தி வெளியிட்ட[illegible] இலங்கையில் தொடரப்பட்ட யு[illegible]த்தில் நாற்பதாயிரம் வரையிலா[illegible] மக்கள் கொல்லப்பட்டதை ஐ.நா. அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

உண்மையில் இவ்வெண்ணிக்கை சரியாக இருந்தால், புலிகள் அமைப்பு தோற்கடிக்கப் பட்டமையானது, இந் நூற்றாண்டின் அதிக இரத்தம் சிந்தப்பட்ட யுத்த நடவடிக்கையாக காணப்படும். ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் Srebrenica என்ற படுகொலை தொடர்பாக கேள்விப்பட்டிருக்கிறோம். பெருந்தொகையான தமிழ் மக்கள் புதைக்கப்பட்டுள்ள முள்ளி வாய்க்கால் படுகொலை தொடர்பாக எத்தனை ஊடகவியலாளர்கள் அறிந்து வைத்துள்ளோம்?

என்றவாறு பி.பி.சி.யின்முன்னாள் ஊடகவியலாளர் *ஃபிரான்சிஸ் ஹரிசன்* தனது மேற்கண்ட தனது கட்டுரையை வரைந்துள்ளார்.

# அமைச்சர் றிசாத் பதியுதீனின் கருத்து பேரினவாதத்தை தூண்டும் செயற்பாடு

## செல்வம் எம்.பி. கண்டனம்



மன்னார் ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து மீண்டும் ஒரு பேரினவாதத்தை தூண்டும் செயலாக காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சரின் கருத்தானது ஒட்டுமொத்த கத்தோலிக்க மக்களின் மனதையும் புண்படுத்தியுள்ள செயல் எனவும் தெரிவித்துள்ள அவர் அமைச்சரின் கூற்றிற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் மன்னார் ஆயர் தொடர்பில் பாராளுமன்றத்தில் கருத்துக் கூறியமை தொடர்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்புள்ளயில் உள்ள பள்ளிவாசல் தாக்குதலில் பௌத்த பிக்குமார் மிகவும் மோசமாக நடந்து கொண்டதுபோல் மன்னாரில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நடந்து கொள்வதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் பாராளுமன்றத்தில் விவாதித்தார்.

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலுடன் பேரினவாதத்தை தூண்டும் வகையில் குறித்த புத்த பிக்குகள் செயற்பட்டிருக்கலாம்.

ஆனால், மன்னாரில் ஆயர் எந்த பள்ளிவாசலை இடித்து புத்த பிக்குகள் போன்று செயற்பட்டுள்ளார் என்பதனை அமைச்சர் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இராயப்பு யோசப் ஆண்டகை மக்களுக்காக எவ்வளவோ பிரச்சினைகளை சந்தித்தார். தற்போதும் சந்தித்து வருகின்றார்.

யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் கூட எவ்வளவு இடர்களை சந்தித்தார். வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக இருந்து சகல விடயங்களையும் பூர்த்தி செய்து கொடுத்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சாட்சியங்களில் காணமால் போன, உயிரிழந்த மக்களின் விபரங்களை முன்வைத்தார். அதன் பலனாக ஆயர் இன்று புலனாய்வுத்துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அமைச்சரின் கூற்றின் படி மன்னாரில் உள்ள முஸ்லிம்களின் காணிகளை எங்கே ஆயர் பறித்துள்ளார் என்பதனை நிரூபிக்குமாறு நான் அமைச்சரிடம் பகிரங்கமாக கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சரின் கருத்து மன்னார் மாவட்ட கத்தோலிக்க மக்களை மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழ் மக்களின் மனதையும் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

அரசியல் மேடைகளில் ஏறி அரசியலுக்காக மக்களை திசை திருப்பும் வகையில் மன்னார் ஆயர் தொடர்பில் இவ்வாறான இழிவான வார்த்தைகளை பிரயோகித்தமையினை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மன்னார் ஆயர் தொடர்பில் இவ்வாறு கூறுயமைக்காக் அமைச்சர் றிசாத் பதியுதீன் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் இன மத ரீதியில் எதனையும் பார்ப்பதில்லை.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் உரிய முறையில் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வமதப் பேரவையினூடாக பகிரங்கமாக முன்வைத்திருந்தார்.

ஆன்மீகத் தலைவர் மீது இப்படிப்பட்ட கருத்துக்களை பாராளுமன்றத்தில் விவாதித்து களங்கம் ஏற்படுத்தியமைக்கு ஒட்டு மொத்த தமிழ் மக்கள் சார்பாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும் எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமைச்சர் மன்னார் ஆயரிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும் பட்சத்திலேயே இதற்கு உரிய தீர்வு கிடைக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (2-7)

# தாயை சந்திக்க உதவுங்கள்; இலங்கைப் பெண் கோரிக்கை

(கொழும்பு)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தமக்கு மரணப்படுக்கையில் உள்ள 90 வயதான தனது தாயை பார்ப்பதற்கு உதவியளிக்க வேண்டும்,என்று டுபாயில் உள்ள இலங்கை பெண் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கல்ப் நியூஸ் தகவலை வெளியிட்டுள்ளது.

டுபாயில் சாரதிபயிற்சிக்கல்லூரியில் பயிற்றுநராக பணிபுரியும் ஹபீபா பீபீ என்ற இந்த இலங்கைப் பெண் புற்றுநோயின் மூன்றாவது கட்டத்தில் உள்ளார். எனவே, 60 வயதான அவர் தாம் இறப்பதற்கு முன்னர் தமது தாயை பார்த்துவிட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

தாம் பணியாற்றி வரும் டுபாயின் சாரதி பயிற்சிக்கல்லூரியில் தமக்கு ஒரு இலட்சம் டோஹார் பணம் கடன் உள்ளது. இந்த நிலையில் அதனை தீர்த்தால் மாத்திரமே தம்மால் இலங்கைக்கு சென்று தாயை சந்திக்க முடியும்.

எனினும் தமது வருத்தத்திற்கு பணத்தை செலவழிக்கவோ அல்லது தாயை சென்று பார்க்கவோ முடியாத நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனவே, பொதுமக்கள் தமக்கு நிதியுதவி புரிய வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (அ-2)

# வேறு நபரின் வங்கி அட்டையை பயன்படுத்தி நிதிமோசடி

(கொழும்பு)

வாடிக்கையாளர் ஒருவரால் வங்கியில் தவறவிடப்பட்ட கடன் அட்டையை பயன்படுத்தி பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.எம்.என்.ப. அமரசிங்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் மூவரும் நீர்கொழும்பு போலவான பிரதேசத்தை சேர்ந்த ஒருவரின் வங்கி அட்டையை பயன்படுத்தி பல இலட்சம் ரூபா பணத்தை மோசடியாக பெற்றுள்ளனர்.


வழக்கின் முறைப்பாட்டாளர் கடந்த 9 ஆம் திகதி நீர்கொழும்பில் உள்ள தனியார் வங்கியொன்றின் தன்னியக்க இயந்திரத்தில் பணத்தை பெற்றுக் கொண்டு செல்லும் போது அவரது வங்கி அட்டையையும் வங்கி அட்டையின் இரகசிய குறியீடு எழுதப்பட்ட காகிதத்தையும் தவறவிட்டுள்ளார்.

இதனை சந்தேக நபர்களில் இருவர் கண்டுள்ளதோடு வங்கி அட்டையை பயன்படுத்தி 80 ஆயிரம் ரூபா பணத்தையும் முதலில் பெற்றுள்ளனர். பின்னர் மூன்றாவது சந்தேக நபரான மஹவெள பிரதேசத்தை சேர்ந்த பெண்ணுடன் இணைந்து 37 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று மூவருமாக பணத்தை பகிர்ந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு 'சந்தேக நபர்களால் கொள்வனவு செய்யப்பட்ட லப்டொப், பிளென்டர், சோபா செட் என்பவற்றையும் பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (7-2)

# நாடகம் ஆடுகிறார் கருணாநிதி

## நிதியமைச்சர் பன்னீர்செல்வம்



இலங்கை தமிழர்களுக்கு டெசோ மூலம் உதவுவதாக கருணாநிதி நாடகம் ஆடுகிறார் என்று தமிழக நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம் சாட்டியுள்ளார்.

கொடைக்கானல் கே.ஆர்.ஆர்.கலையரங்கம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

கடந்த தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்கள் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளானார்கள். குறிப்பாக அவரது வாரிசுகள் தமிழகத்தையே 4 மாநிலமாக பிரித்து ஆட்சி செய்தனர். இதற்கு முடிபு கட்டவே தமிழக மக்கள் ஜெயலலிதாவை முதல்வர் என்ற அரியணையில் அமர வைத்தனர்.

இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரின் போது மத்திய அரசும் அப்போதைய முதல்வர் கருணாநிதியும் எதுவும் செய்யவில்லை. ஆனால், இன்று தனி ஈழம் அமைக்கப் போவதாக டெசோ என்ற அமைப்பை உருவாக்கி கருணாநிதி நாடகமாடி வருகிறார்.

இந்தியாவில் இருந்துதான் இலங்கைக்கு ஆயுதங்கள் சென்றன. இராணுவ வீரர்கள் சென்றனர். இலங்கையில் ஒரே இடத்தில் 45 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதை எதிர்த்து குரல் கொடுத்ததோடு மட்டும் அல்லாது சட்டசபையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியவர் முதல்வர் ஜெயலலிதா மட்டுமே என்றார். (2-7)

# ஜீ.எல்.பீரிஸ் மனித உரிமைகளை ஹிலாரிடம் அடகு வைத்துள்ளார்

## தம்பர அமிலதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை போஷிக் கும் பொறுப்பினை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக காலணித்துவ எதிர்ப்பு தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இனவாதம் வளர்வதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர் கள் பொறுப்புச் சொல்ல வேண்டும். நாட்டு மக்களின் மொத்த உரிமை களையும் வெளிவிவகார அமை ச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனிடம் அடகு வைத்துள்ளார்.

நாடு அரசியல் ரீதியாக பலவீன மடைந்துள்ளது. காலணித்துவ சக்திகளுக்கு எதிரான வலுவான போராட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது.

நாட்டில் இன மற்றும் மதவாதம் தலை தூக்க அரசியல் தலைவர் களே காரணம். இதனைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர்.


வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளே நாட்டுக்குள் காலணித்துவ சக்திகள் ஊடுருவக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

108

## அந்தப்புர இரகசியம்



தர்மபுரி மன்னர் சிவசேனர் தன் மனைவி மணிமாலா மீது மிகவும் பிரியம் வைத்திருந்தார். அழகில் சிறந்த மணிமாலா நற்குணங்களும் நிரம்பப் பெற்றவளாக இருந்தாள். ஆயினும் அவளிடம் ஒரே ஒரு குறை இருந்தது. அவளுடைய மனதில் எந்த இரகசியமும் நிற்காது.

அவளுடைய சங்கடத்தைப் புரிந்து கொண்ட மன்னர் அவளுக்கு ஒரு யோசனை கூறினார். மணி! நான் உன்னிடம் கூறும் விடயங்களை உன் தோழிகளில் யாராவது ஒருத்தியிடம் மட்டுமே கூறு! அவளை எப்போதும் அந்தப்புரத்தில் உன் செய்தார். மஞ்சரி இயல்பாகவே அமைதியானவள். யாரிடமும் வீணாக அரட்டை அடிப்பவள் இல்லை. அவளுக்கு ஒரு மகளைத் தவிர வேறு யாரும் இல்லை.

மஞ்சரி தன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்தாள். சிவசேனர் மணிமாலாவிடம் எப்போதும் போல் அந்தப்புரத்தில் அமர்ந்து பல அரசாங்க விடயங்களைப் பற்றிக் கூற மணிமாலா அவையாவற்றையும் மஞ்சரியிடம் பேசித் தீர்த்து விடுவாள்.

ஆனால் மஞ்சரி அவற்றை வேறு யாரிடமும் கூற மாட்டாள்.

## அம்புலி மாமா கதைகள்

அருகிலேயே வைத்துக்கொள். அவளை வேறு யாரிடமும் பேச விடாதே! அவ்வாறு செய்தால் உன் பிரச்சினை தீர்ந்துவிடும். உன் தோழிகளில் அத்தகைய நம்பத்தகுந்த ஒருத்தியைத் தேர்வு செய்! என்றார்.

குழப்பத்தில் ஆழ்ந்த மணிமாலா, என் தோழிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். நீங்களே அவர்களில் ஒருத் இதனால் மணிமால்ா மிகவும் மகிழ்ந்து அவளுக்கு அடிக்கடி பல பரிசுகள் அளித்து வந்தாள்.

சில ஆண்டுகள் சென்றன. ஒரு நாள் மஞ்சரி கொடிய நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்து இறந்து போனாள். அவளுடைய பிரிவினால் மிகவும் பாதிக்கப்பட்டவள் மணிமாலா தான்! தன் உயிருக்குயிரான அந்தரங்க தோழியை இழந்ததுடன் தன் செவிகளில்



தியை தேர்வு செய்யுங்கள்! என்றாள். பின்னர் தன் தோழிகள் அனை வரையும் மன்னருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவர்களு டைய நடவடிக்கைகளை ஒற்றர் கள் மூலம் கண்காணிக்கச் செய்த பின் அவர்களுள் ஒருத்தியான மஞ்சரியை மன்னர் தெரிவு படும் விடயங்களைப் பகிர்ந்து கொள்ள சரியான ஆள் இல்லாமல் மிகவும் கஷ்ரப்பட்டாள்.

ஒரு நாள் மணிமாலா மன்னரிடம், மஞ்சரிக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் பெயர் சந்திரிகா! வயது பதினெட்டு! மஞ்சரியின் இடத்தில் அவளை நியமிக்கலாம் என்று நினைக்கிறேன்! என்று கூற மன்னவர், யோசித்துச் சொல்கிறேன்! என்றார்.


ஆனால், மன்னர் வேறு பல அவசரமான அலுவல்களில் மூழ்கிய தால் ராணி சொன்னதை மறந்து விட்டார். திடீரென ஒருநாள் மணிமாலா சந்திரிக்காவை தன் அந்தரங்கத் தோழியாக ஆக்கி விட்டதைக் கூறியதும் மன்னர் திடுக்கிட்டார். அதன் பின் அவள் எப்படிப் பட்டவள் என்று அறிந்து கொள்வதே மேல் என்று கருதிய மன்னர் சந்திரிகாவின் குணங்களை ஆராய ஒற்றர்களை நியமித்தார்.

ஒற்றர்கள் அவளைப் பற்றிய முழு விபரங்களைக் கூறியதைக் கேட்டதும் மன்னருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. சந்திரிகா தன் தாயின் குணத்திற்கு நேர்மாறானவள் என்று தெரிந்தது. சில விடயம் தன் காதில் விழுந்தாலும் அதை ஊர் முழுக்க டமாரம் அடிப்பவள் அவள் என்ற உண்மை தெரிந்தது.

கடவுளே! நான் ராணியிடம் பகிர்ந்து கொண்ட இரகசியங்களை இந்தப் பெண் ஊரறிய டமாரம் அடித்து விட்டாளோ என்று பயந்து போன மன்னர் உடனே ராணியிடம் வந்து புதிய பெண் சந்திரிகாவிடம் நான் உனக்குக் கூறிய இரகசியங்களில் ஏதாவது சொல்லி விட்டாயா என்று கேட்க மணிமாலா சொன்னேனே! விஜயபுரி மன்னர் நம் மீது போர் தொடுக்கத் திட்டமிட்டுள்ளார். என்று நீங்கள் கூறிய இரகசியத்தை அவளிடம் சொன்னேன்! என்றாள். மன்னரின் தலையில் இடி விழுந்தது போல் ஆயிற்று.

உடனே தன் ஒற்றர்களை அழைத்து சந்திரிகா அரண்மனையை விட்டு எங்காவது வெளியே சென்றாளா? யாருடனாவது பேசினாளா? என்று அறிந்து வரப் பணித்தார். அரண்மனைக் காவலர்கள் வாயிலாக சந்திரிகா அன்று காலையிலேயே எங்கோ வெளியே சென்று விட்டாள் என்றும் இது வரை வரவில்லை என்றும் கூறினர். ஒற்றர்கள் சந்திரிகா மயானத்தில் சுற்றித் திரிந்தாள் என்றும் பின்னர் கோயிலுக்குச் சென்றாள் என்றும் கூறினர். மன்னருக்கு இருப்புக் கொள்ளவில்லை சந்திரிகாவைத் தேடி இழுத்து வரச் சொன்னார். அந்த சமயம் அவளே உள்ளே நுழைந்தாள்.


அவளைக் கண்டதும் மன்னர் பரபரப்புடன் அந்தப் புரத்தை விட்டு நீ ஏன் வெளியே சென்றாய்? என்று கேட்க அவள் மகாராஜா எனக்கு எந்த விடயம் காதில் பட்டாலும் உடனே அதை யாரிடமாவது கூறி விட வேண்டும். ஆனால் என் தாய் இங்கு எத்தகைய பணி புரிந்தாள் என்றும் தெரியும். மகாராணி நேற்று என்னிடம் விஜயபுரி மன்னரின் படையெடுப்பைப் பற்றி கூறியவுடன் என்னால் சும்மா இருக்க முடியவில்லை. யாரிடமாவது கூறாவிட்டால் தலை வெடித்து விடும் போல் இருந்தது. ஆனால் அந்தப்புர இரகசியத்தை வெளியிட்டாலும் ஆபத்து அதனால் நேராக மயானம் சென்று என் தாயை அடக்கம் செய்த இடத்தில் அந்த இரகசியத்தை என் தாயின்



ஆத்மாவிடம் கூறினேன். இந்த யுத்தம் நடைபெறக் கூடாது என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டேன். என்றாள். தான் நினைத்த வாறு இல்லாமல் மிகவும் விவேகத்துடன் நடந்து கொண்ட சந்திரிக்காவின் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து போன மன்னர் தன் விரலிருந்த மோதிரத்தை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். கொடுத்த பின் சந்திரிகா நான் மோதிரம் தந்தது ஓர் அந்தப்புர இரகசியம். உன்னை யாராவது மோதிரத்தைப் பற்றிக் கேட்டால் நீ உண்மை சொல்லக் கூடாது! என்று சொல்ல சந்திரிகா சிரித்துக் கொண்டே தலை ஆட்டினாள்.

# அதிசய உலகம்...

## கை,கால்களை இழந்தவர் கண்டங்களிடையே நீச்சல்



ஃபிலீப் குரொய்ஜோன் தான் ஏற்றுக்கொண்ட சவாலின் முதற்க்கட்டமாக இந்தோனேஷியாவின் கிழக்கே அமைந்துள்ள பப்புவா மாகாணத்தின் பாசார் ஸ்கவ் தீவுக்கு நீந்தி வந்துள்ளார்.

## காரில் உலகம் சுற்றி இளைஞர்கள் சாதனை




இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் பவுல் ஆர் செர் (வயது-25), லெயிக் புருநெல் (வயது-24), ஜானோ எல்சன் (வயது-28)நண்பர்க ளான இந்த 3 பேரும் வாடகை காரில் (டாக்சி) உலகம் முழுவதும் சுற்றி வந்து சாதனை நிகழ்த்த தீர்மானித்தனர். அதன்படி லண்டனில் இருந்து கடந்த ஆண்டு (2011) பெப்ரவரி மாதம் தங்களது உலக சுற்றுப்பயணத்தை தொடங்கினர். இவர்கள் 4 கண்டங்களில் உள்ள 50 நாடுகள் வழியாக 69 ஆயிரம் கிலோ. மீற்றர் தூரத்தை கடந்து மீண்டும் லண்டன் போய்ச் சேர்ந்துள்ளனர்.

## சொக்லேட் சாப்பிடும் மீன் லண்டனில்




லண்டனில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் அருங்காட்சியகத்தில் உள்ளது. இக்காட்சியகத்தில் கேரி என்ற பெயருள்ள பெரிய மீன் ஒன்று உள்ளது. இதை முன்பு வளர்த்தவர் இந்த மீனுக்கு சொக்லேட் உணவுகளை கொடுத்து வளர்த்திருந்தார். இதனால் அருங்காட்சியகம் வந்த பின்னரும் சொக்லேட் கலந்த உணவுகளை மட்டுமே இது சாப்பிடுகின்றதாம். ஏனைய உணவுகளை இது சீண்டிக்கூட பார்க்கவில்லையாம்.

# சனத்தொகை முடிபுகள் வெளியிட அரசாங்கத்தின் அனுமதி தேவை

(கொழும்பு)

இலங்கையில் 30 வருடங்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் முடிபுகள் வெளியாகவுள்ளன.

இந்த நிலையில் அதனை வெளியிடுவதற்கான அனுமதிக்காக காத்திருப்பதாக புள்ளி விபரவியல் திணைக்கள தலைவர் எச்.ஆர். குணசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கமே இந்த சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட அனுமதி வழங்கவேண்டும் என்று குறிப்பிட்ட அவர் அது தொடர்பான மேலதிக தகவல்களை தர மறுத்துவிட்டார்.

1981 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் நடத்தப்பட்ட இந்த சனத்தொகை மதிப்பீட்டின் போது 80 ஆயிரம் கணக்கெடுப்பாளர்களும் ஒரு இலட்சம் மேற்பார்வையாளர்களும் பங்கேற்றனர். இதற்காக 1.7 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. (2-7)

# வடமராட்சி கிழக்கில் குவியும் தென்னிலங்கை மீனவர்கள்

### மக்கள் விசனம்

(பொற்பதி)

தென் இலங்கையில் இருந்து வடமராட்சி கிழக்கு நோக்கி கடலட்டை மற்றும் கடற்சங்கு ஆகியவற்றை பிடிப்பதற்கு வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழில் சார்ந்த அமைப்புக்களும் கடற் றொழிலாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, கடந்த மாதம் முதல் தென்னிலங்கையில் இருந்து கடலட்டை மற்றும் கடற்சங்கு தொழிலாளர்கள் வந்து தொழிலை மேற்கொள்வதால் இங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழிலில் மீன் அகப்படும் தன்மை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இங்குள்ள கடற்றொழில் சார்ந்த குடும்பங்கள் தமது அன்றாட வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வாறான தென்னிலங்கை கடற்றொழிலாளர்களின் வரவை முற்றாக கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் சார்ந்த அமைப்புக்கள் விரைந்து நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

இதனால் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-64)

# பொன்சேகா வெளிநாடு செல்ல முடியாதாம் -ரொய்டர் தகவல்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை முன்கூட்டியே விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக அவரது பேச்சாளர் பந்துல ஜெயசேகர ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் நேற்று முன்தினம் காலை உறுதிப்படுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பான ஆவணங்களில் ஜனாதிபதி கையெழுத்திட்டு விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், சரத் பொன்சேகா வெளிநாடு செல்ல முடியாது என்றும் ரொய்ட்டர் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை,**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள்- 2010**

**1. கலைமுதற் தேர்வு-2010 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 15.06.2012 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 02.07.2012 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 11.06.2012 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
21.05.2012

(சி/050)

# ஈழத் தமிழினத்திற்கு நேர்ந்த பின்னடைவு தமிழ்நாட்டு தமிழர்களையும் பாதித்துள்ளது



## மணியரசன் ஆவேசம்

**முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நேர்ந்த பின்னடைவும் தோல்வியும் ஒட்டு மொத்த தமிழ் இனத் திற்கும் ஏற்பட்ட தோல்வியாகும். இக்கருத்தை இன உணர்ச்சி அடிப் படையில் மட்டும் நான் கூறவில்லையென தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பெ.மணியரசன் தெரிவித்துள்ளார்.**

தஞ்சை தொடர்வண்டி நிலையத்தில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் நடைபெற்ற வீரவணக்க நினைவேந்தல் நிகழ்வில் சிறப்புடையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், முள்ளிவாய்க்கால் குருதி வெள்ளத்தில் மூழ்கிய தமிழ் இனச் சொந்தங்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம்.

ஆயுதமேந்தி முப்படைகள் கொண்டு போராடிய ஈழத்தமிழர்களையே தோற்கடித்துவிட்டோம். தமிழ்நாட்டுத் தமிழர்கள் எம்மாத்திரம்? என்ற உணர்வு இந்திய ஏகாதிபத்திய அரசுக்கும் நமக்குப் பகைவர்களாகிப் போன அண்டை இனங்களான கன்னடர்கள், மலையாளிகள் போன்றோருக்கும் ஏற்படும்.

எடுத்துக்காட்டாக காவிரி உரிமையை மீட்க தஞ்சை மாவட்டத்திலும் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் கடும் போராட்டங்கள் நடத்தினோம். அதில் இந்திய அரசின் துணையோடு கன்னடர்கள் நம்மை தோல்வியடையச் செய்தார்கள். அது மட்டுமின்றி 1991 நவம்பர்- டிசெம்பர் மாதங்களில் காவிரிக் கலவரம் என்ற பெயரில் கர்நாடகத் தமிழர்களைத் தாக்கி கன்னட வெறியர்கள் தமிழர்கள் பலரைக் கொன்றார்கள். வீடுகளை சூறையாடினார்கள். தமிழ்ப் பெண்கள்ளை மானபங்கப்படுத்தினார்கள். இரண்டு இலட்சம் கர்நாடகத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு ஓடி வந்தார்கள். நாம் பதிலடி கொடுக்கவில்லை. அகதி முகாம்கள்தாம் நடத்தினோம்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழர்களை விட மிகவும் குறைந்த மக்கள் தொகை கொண்ட மலையாளிகள் முல்லைப் பெரியாறு அணை உரிமையைப் பறித்தார்கள். தமிழர்களைத் தாக்கினார்கள். ஐயப்பன் கோவிலுக்கு சாமி கும்பிடப்போன தமிழர்களையும் தாக்கினார்கள். இந்த துணிச்சல் மலையாளிகளுக்கு எங்கிருந்து வந்தது?

எனவே முள்ளிவாய்க்காலில் தமிழினத்திற்கு ஏற்பட்ட வீழ்ச்சி ஈழத் தமிழர்களுக்கு மட்டும் பாதிப்பை உண்டாக்கவில்லை. தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் பாதிப்பை உண்டாக்கியுள்ளது. இதை உணர்ந்து சாதியாக பிளவுபடாமல் ஒன்று திரண்டு வருங்காலத்தில் மூர்க்கமாக உரிமை மீட்கப் போராட வேண்டும்.

தமிழ்நாட்டுத் தமிழர்களின் விடுதலைப் போராட்டமமும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை என்று நாம் உணர வேண்டும். இந்தப் படிப்பினையை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். (அ-2).

# தமிழீழ கோரிக்கையை கைவிட வேண்டும்

## ஞானதேசிகன் கெஞ்சல்

தமிழ் ஈழம் கேட்பதை கைவிட வேண்டும் என்று இங்குள்ள தலைவர்களை கெஞ்சி கேட்கிறேன். ஏனென்றால் இலங்கையில் தற்போது தமிழர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வேகமாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு செய்து வருகிறது என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நிருபர்களிடம் பேசிய அவர்,

இலங்கையில் தனி ஈழம் அமைய வேண்டும் என்பதற்காக டெசோ அமைப்பை தி.மு.க. ஆரம்பித்துள்ளதால் தி.மு.க. காங்கிரஸ் உறவு பாதிக்காது. இலங்கை பிரச்சினையில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு அணுகுமுறையை கையாள்கிறது. இலங்கையில் தமிழ் ஈழம் கேட்பதை கைவிட வேண்டும் என்று இங்குள்ள தலைவர்களை கெஞ்சி கேட்கிறேன்.

ஏனென்றால் இலங்கையில் தற்போது தமிழர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வேகமாக ராஜபக்ஷ அரசு செய்து வருகின்றது. தனி ஈழம் கோரிக்கை மீண்டும் வலுப்பெறும் போது அது தமிழர்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்காது எனபது தான் எனது கருத்தாகும். தமிழர்களுக்கு பாதகமாகத்தான் இந்த கோரிக்கை அமைகிறது என அவர் கூறினர்ா. (அ-7)

# விசாரணையின்றி அடைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

## சீமான் கோரிக்கை

(சென்னை)

இலங்கை சிறையில் சட்டவிரோதமாக விசாரணையின்றி அடைக்கப்பட்டுள்ள போராளிகளை விடுவிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் தமிழினத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போருக்குப் பின்னால் சரணடைந்தபோது கைது செய்யப்பட்டு கொழும்பு சிறையில் அடைக்கப்பட்ட போராளிகள் 200 பேர் தங்களை விசாரணையின்றி இரண்டரையாண்டு காலமாக சிறை வைத்திருப்பதை எதிர்த்து காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். சட்டத்திற்குப் புறம்பாக இரண்டரையாண்டு காலமாக சிறையில் வைக்கப்பட்டுள்ள தங்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி கொழும்பு சிறையில் வைக்கப்பட்டுள்ள 204 போராளிகள் இன்றுடன் 5 நாட்களாக பட்டினிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களில் சிலரின் உடல் நிலை மோசமடைந்ததையடுத்து அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சட்டத்திற்கு புறம்பாக சிறைபடுத்தப்பட்டுள்ளோர் அனைவரையும் இலங்கை அரசு உடனடியாக விடுவிக்கவில்லையென்றால் இலங்கை தூதரகம் முன்பு நாம் தமிழர் கட்சி மறியல் போராட்டத்தில் ஈடுபடும் என்று சீமான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# 2013 இல் பூமியை நெருங்கும் எரிகல் செயற்கைக்கோள்களில் மோதுவதால் ஆபத்து



(லண்டன்)

ஸ்பெயினில் உள்ள லாசக்ரா வானிலை மைய விண்வெளி நிபுணர்கள் ஒரு எரிகல்லை கண்டுபிடித்தனர். அதற்கு டி.ஏ.14 என பெயரிட்டுள்ளனர். இந்த எரிகல் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தொன் எடை உள்ளது.

இது 2013 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பூமியை நெருங்கும் என்று தெரிவித்துள்ளனர். இது பூமியை நெருங்கி மோதும் போது பல பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக பூமியை சுற்றி வரும் செயற்கை கோள்களில் மோதி அவை அழியும் வாய்ப்பு உள்ளது. குறைந்தது அவற்றின் தகவல் தொடர்புகள் கூட துண்டிக்கப்படலாம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நாசா விண்வெளி மையமும் கருத்து தெரிவித்துள்ளது. அதாவது டி.ஏ.14 எரிகல் பூமியை தாக்கும் போது 0.031 சதவீதம் மட்டுமே பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த 1908 ஆம் ஆண்டு இது போன்று இராட்சத எரிகல் சைபீரியா காட்டில் விழுந்தது. அப்பொது பல நூறு சதுர மைல்கள் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

(அ-2)

# இத்தாலியில் பயங்கர பூகம்பம்; கட்டடங்கள் இடிந்து 6 பேர் பலி




(பெராரா)

இத்தாலியில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் 6 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். பழங்கால கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இத்தாலியின் வடகிழக்கில் உள்ள பினாலெ எமிலியா பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இதில் பழங்கால கட்டடங்கள், கோயில்கள், வீடுகள் மற்றும் பல்வேறு கலாசார நினைவு சின்னங்கள் இடிந்தன. அடுத்தடுத்து அதிர்வுகள் உணரப்பட்டதால் பீதியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

பூகம்பத்தால் செயின்ட் அகோஸ்டினா நகரில் உள்ள தொழிற்சாலைகள் இடிந்து விழுந்ததில் இரவு பணியில் ஈடுபட்டிருந்த 4 பேர் பலியாகினர். மேலும் பூகம்ப அதிர்ச்சியில் 37 வயது பெண் மற்றும் 100 வயதை தர்ண்டிய மூதாட்டி ஒருவரும் பலியாகினர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ரிக்டர் அளவுகோலில் 6 புள்ளியாக பதிவான பூகம்பம் பொலோக்னாவின் வடக்கே 36 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. (அ-2)

# ஆப்கான் கடுமையான சவால்களை எதிர்நோக்கும் நிலைமை ஏற்படும்

## ஒபாமா தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் எதிர்காலத்தில் கடுமையான சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்ப டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தொடர்பில் சிக்காக்கோவில் நடைபெற்ற நேட்டோ அமர்வுகளில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பை கருத்திற் கொண்டு பல்வேறு தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பை உறுதி செய்யும் இலக்கிற்காக தொடர்ந்தும் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் படையினரிடம் பாதுகாப்பு கடமைகளை முழுமையாக ஒப்படைப்பதற்கு தேவையான சூழ்நிலை உருவாக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக நிதி மற்றும் ஏனைய உதவிகளை நாடுகள் தொடர்ச்சியாக வழங்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

நேட்டோ அமர்வுகளில் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரான்ஸ் உள்ளிட்ட சில நாடுகள் இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தியுள்ள படையினரை வாபஸ் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளன.

உள்நாட்டு அரசியல் அழுத்தங்கள் காரணமாக இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பு கடமைகள் முழுவதையும் ஆப்கான் படையினரிடம் ஒப்படைக்க நேட்டோ உத்தேசித்துள்ளது.

(அ-2)

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்...
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரசுக்குச் சாதகம் இல்லாத சரத் பொன்சேகாவின் விடுதலை

நவக்கிரகங்களின் ஆட்சி அதிகாரங்களே மனித வாழ்வைத் தீர்மானிப்பதான நம்பகங்கள் தாராளமாக உண்டு. இதன் காரணமாகவே சோதிடம் இந்த உலகில் நிலைபேறடைந்துள்ளது.

அரசியல் முதல் ஆன்மீகம் வரை எங்கும் வியாபித்து இருக்கக்கூடிய சோதிடத்தின் விரிபரப்பென்பது, நவக்கிரகங்களை உள்ளடக்கியதாகும்.

ஒருமுறை இராவணன் தன் மகன் இந்திரஜித் பிறக்கின்ற வேளையில் ஒன்பது கிரகங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிவு செய்தான்.

அதற்காக ஒன்பது படிகளில் ஒன்பது கிரகங்களையும் குப்புறக்கிடத்தி அவற்றை ஏறிமிதித்துச் சென்று தன் சிம்மாசனத்தில் அமருவான்.

ஒவ்வொரு கிரகங்களையும் அந்தந்த இடத்தில் வைத்து இந்திரஜித் பிறப்பதற்கான ஏற்பாடுகளை இராவணன் செய்தமை கண்டு தேவர்கள் கலங்கினர்.

கிரகங்களின் பார்வை இல்லாதபோது இந்திரஜித் பிறப்பானாக இருந்தால், அது உலக இயங்கு நிலைக்குப் பழுது என்று துணிந்து கொண்டனர்.

அதனால் அவசரமாக நாரதரை இராவணனிடம் அனுப்பி வைத்தனர்.

இலங்காபுரி வந்த நாரதர் இராவணனைச் சந்தித்து இராவணா உனக்கு ஒரு கிரகத்தால் ஆபத்து என்றார்.

எது?என்று வினவினான் இராவணேஸ்வரன்.

எட்டாம் வீட்டில் குப்புறக் கிடக்கின்ற சனீஸ்வரனால் தான் உனக்கு ஆபத்து என்றார் நாரதர்.

அப்படியா! அந்த ஆபத்தை தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும் என இராவணன் நாரதரைக் கேட்க, எட்டாம் வீட்டில் இருக்கக்கூடிய சனீஸ்வரனை மல்லாக்காகக் கிடத்தி அவனை காலால் மிதித்துச் செல் என்றார் நாரதர்.

அதன்படியே இராவணன் செய்ய, எட்டாம் வீட்டு சனீஸ்வரன் இராவணனை பார்த்து விடுகின்றான்.

அவ்வளவுதான் இராவணனின் கதை கந்தலாகிப் போகின்றது.

கிரகங்களைக் கட்டுப்படுத்தி தான் நினைத்த பாட்டில் எல்லாம் நடக்கும்படியாக செய்ய நினைத்த இராவணன் போல, தாமும் தமக்கு எதிரானவர்களை தண்டித்து சிறையில் அடைத்து எல்லாவற்றையும் சாதிக்க வேண்டும் என்று பலர்நினைப்பதுண்டு. எனினும் அதற்கு கிரகங்கள் விடுவதாக இல்லை.

இலங்கை அரசைப் பொறுத்தவரை 2009 ஆம் ஆண்டு மே மாதம் இருந்த சாதக நிலை 2012ஆம் ஆண்டு மே மாதத்தில் இல்லை.

மூன்று ஆண்டுகள் நிறைவுக்குள் பலமாற்றங்கள்.

ஜெனிவாத் தீர்மானம் உட்பட நேற்று நடந்த சரத் பொன்சேகாவின் விடுதலை வரை அரசுக்கு காலம் சாதகமாக இல்லை என்பதையே சுட்டி நிற்கின்றது.

யார் என்னதான் கூறினாலும் சரத் பொன்சேகாவின் விடுதலை என்பது அமெரிக்கா கொடுத்த அழுத்தத்திற்கு ஜனாதிபதி அடி பணிந்ததால் நடந்ததாகும்.

சரத் பொன்சேகாவின் விடுதலை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு ஆரோக்கியமானதாக இருக்க முடியாது என்பது ஜனாதிபதிக்கும் தெரிந்ததே.

சுருங்கக்கூறின், எட்டாம் வீட்டில் இருந்து இராவணனைப் பார்த்தது போன்ற, நிலைமை இங்கு நிறையவே உண்டு.

அமெரிக்கா நினைத்த காரியம் நிறைவேற சரத் பொன்சேகா வெளியில் வரவேண்டும். அது நடந்தாயிற்று. இனி அமெரிக்கா நினைத்தது நடப்பதுதான் பாக்கி.

எல்லாவற்றையும் பொறுமையாக இருந்து பார்த்த நாம் இதனையும் பொறுமையுடன் பார்க்கலாம்.

# பொன்சேகாவை கொத்திக்கொண்டுபோய் ஆட்சியமைக்க சிலர் கனவு காண்கின்றனர்

## மனோ கணேசன் ஆரூடம்

(கொழும்பு)

பொன்சேகா விடுதலை தொடர்பில் நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பரபரப்பு பெரும்பான்மை இன அரசியல் பரப்பாகும். இதில் தமிழ் பேசும் மக்களுக்கு பங்கு எதுவும் கிடையாது. அரசியல் காரணங்களுக்காக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட அவரின் விடுதலையை நாமும் வரவேற்கிறோம்.

அவரது மகிழ்ச்சி கொண்டாட்டங்களை நடத்துபவர்கள் நடத்தட்டும். ஆனால் நாம் பட்டாசு கொளுத்தி கொண்டாடமுடியாது. சிறையில் உள்ள நமது தமிழ் இளைஞர்களும் விடுதலையானால் நாமும் பட்டாசு கொளுத்தி கொண்டாடுவோம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு பற்றி கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சரத் பொன்சேகா தொடர்பில் நாட்டில் குறிப்பாக பெரும்பான்மை மக்கள் மத்தியில் பெருத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டை பிடித்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடும் மக்கள் அவரை நோக்கிய எதிர்பார்ப்புக்களை வளர்த்துக்கொண்டுள்ளது ஆச்சரியமானது அல்ல.

ஆனால் நாட்டை பிடித்துள்ள பிரச்சினைகளில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கும் மனப்பாங்கு பெரும்பான்மை மக்களிடமும் பெரும்பாலான பெரும்பான்மை கட்சிகளிடமும் இல்லை.

எனவே எந்தவொரு பெரும்பான்மை கட்சியையும் பெரும்பான்மை தலைவரையும் தமிழ் பேசும் மக்கள் முழுமையாக நம்பி விட முடியாது.

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக பெரும்பான்மை அரசியல் அமைப்புகளுடன் நாம் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. இது நடைமுறை அரசியல் ஆகும்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் சரத் பொன்சேகா இந்த அடிப்படையில் தான் பொது அபேட்சகராக எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். எதிர்காலத்திலும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளும் உள்ளடக்கிய பொது வேலைத் திட்டத்தை அவர் ஏற்றுக்கொள்பவராக இருந்தால் எதிர்க்கட்சிகளுடன் அவரது கட்சியும் இணைந்து கொள்ளலாம். அதற்கு இடம் இருக்கின்றது.

அதேவேளையில் யுத்தத்தை வெற்றி கொண்டவர் என்ற முறையில் அவரை கொத்திக்கொண்டு சென்று இன்றைய அரசை விட சிங்கள, பௌத்த தேசியவாதத்தை முன்னெடுத்து குறுக்குவழியில் ஆட்சியை கைப்பற்றலாம் என்றும சிலர் கனவு கண்டுகொண்டு இருக்கின்றார்கள். இது எமக்குத் தெரியும்.

எனவே தேசிய பிரச்சினைகள் தொடர்பில் அவரது நிலைப்பாடுகள் என்ன என்பது பற்றி சரத் பொன்சேகா நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த தெளிவு பிறக்கும் வரை தமிழ் பேசும் மக்கள் அவசரப்படாமல் நடக்கும் சம்பவங்களை நிதானமாக அவதானிக்க வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும். (அ-2)

# துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாக பயணிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாக பயணிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு போதுமானதாகவில்லை.

வீதிகளில் மிதமிஞ்சிய வேகத்தில் வாகனங்களை செலுத்தி செல்வதனாலும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மோட்டார் வாகனங்கள், துவிச்சக்கர வண்டியில் வீதிகளில் சமாந்தரமாக பயணிப்பதனாலும் அதிகளவில் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

பலமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் சிலர் வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்பதை தொடர்ந்து மறுத்து வருகின்றனர். இதில் பாடசாலை மாணவ, மாணவிகளும் உள்ளடங்குகின்றனர்.

வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக வீதிகளில் தடுப்புக்கள் போடப்பட்டுள்ள நிலையில் சமாந்தரமாக பயணிப்பதனால் அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

எனவே இந்த விடயத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் கவனமெடுத்து வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்து விபத்துக்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-6)

## சான்றிதழ் கற்கைநெறிகளை நிறைவுசெய்தவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால் நடாத்தப்பட்ட சான்றிதழ் கற்கை நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். இந் நிகழ்வில் சான்றிதழ் பெறவுள்ள மாணவர்களுக்கான அழைப்புக் கடிதம் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் கிடைக்கப் பெற்றவர்கள் தங்கள் பெயர்களை மேற்படி நிகழ்வில் பங்குபற்றுவதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-7)

## பாரதியார் பல்கலையில் ஊடக பட்டப்படிப்பு

(யாழ்ப்பாணம்)

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்புக்கள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதில் Certificate in Journalism, Diploma in Journalism, B.sc(visual Communication, P.G. Diploma (Communicative English), M.A. (Journalism & Mass Communication ) ஆகிய கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறியை பயில விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு இல 891 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது 021 2226085, 0217200898 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நீங்கள் பாக்கியசாலிகள்



நல்லவர்கள் பிறருடைய நன்மைக்காக வாழ்கின்றனர். உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாக என்னுடைய நன்மையை நான் பெறமுடியும். இதைத் தவிர வேறு வழி இல்லை.

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் அனைத்து வழிபாடுகளின் சாரம்.

இறைவனுக்கு உதவுவதாக எப்போதும் செல்லாதீர்கள். அவருக்காக பணியாற்றும் பேறுபெற்ற நாம் பாக்கியசாலிகள் ஆவோம்.

நாய்க்கு சோறு கொடுக்கும் போது அந்த நாயையும் கடவுளாகக் கருதி வழிபடு. ஏனெனில் அந்த நாயினுள்ளும் கடவுள் இருக்கிறார். அவரே எல்லாமுமாய் இருக்கிறார். எல்லாவற்றிலும் இருக்கிறார்.

ஏழைகளிடம் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுபவன் ஆகிறான். விக்ரகத்தில் சிவனை வழிபடுவது ஆரம்ப நிலைதான்.

# தமிழீழம் அமைய ஐ.நா.சபையை வலியுறுத்த ஆவன செய்யுங்கள்

## யுனெஸ்கோ பொதுச் செயலாளரிடம் ஜின்னா கோரிக்கை

**தனித்தமிழீழம் அமைய ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்த ஆவன செய்ய வேண்டுமென யுனெஸ்கோ மையத்தின் ஆசிய பசுபிக் மனித உரிமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள அசன் முகம்மது ஜின்னா யுனெஸ்கோ மையத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் டே சுல்கிமிற்கு கடிதம் எழுதியுள்ளார்.**

அசன் முகம்மது ஜின்னா எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யுனெஸ்கோ மையத்தின் ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள நான் எனது முதல் பணியாகப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பற்றிய தகவல்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விளைகிறேன்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட அத்துமீறல்கள் மற்றும் கொடிய தாக்குதல்களால் மிகுந்த மனவேதனையுடன் உள்ளனர்.

தாய்த் தமிழகம் என உலகத் தமிழர்களால் பெருமையுடன் அழைக்கப்படும் எங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள மக்கள், இத்தகைய கொடூரத் தாக்குதலிருந்து இலங்கைத் தமிழர்கள் எப்போது விடுதலையாவார்கள் என்ற எதிர்பார்ப்பும் ஏக்கமும் கொண்டுள்ளனர்.

தமிழகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவரும் இந்தியாவின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரும் 89 வயதிலும் தமிழினத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருப்பவரும் ஐந்து முறை தமிழ் நாட்டின் முதல்வராக இருந்தவருமான கலைஞர் கருணாநிதி தன் நெடிய பொதுவாழ்வு அனுபவத்தின் வாயிலாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் அமைதியும் கிடைத்திட வேண்டும் என்பதைக் குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகிறார்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அமைதியுடன் வாழ வழிவகை செய்ய வேண்டும் என 1956 இல் நடந்த கட்சியின் பொதுக்குழுவில் அப்பொழுதே தீர்மானம் நிறைவேற்றினார் கலைஞர்.

இலங்கைத் தமிழர்களுக்குத் தனித் தமிழீழத் தாயகம் உருவாவதே உண்மையான விடுதலை என்பதையும் இதற்கான பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் கலைஞர் வலியுறுத்தி வருகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்பில் பொதுவாக்கெடுப்பு ஒன்றினை நடத்தித் தனித்தமிழீழம் அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கை மனித உரிமைகளிலும் மனித சமுதாயத்தின் நல்லிணக்கத்திலும் நம்பிக்கை உள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

இந்த வாக்கெடுப்பில் இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் உலகின் புல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்பது தமிழகத் தலைவர் கலைஞரின் கோரிக்கையாகும்.

போர் முடிவுற்ற பின்னரும் தமிழர்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் அத்துமீறல்கள் குறித்தும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர வீரும்புகிறேன். தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவதும் தமிழர்கள் வாழும் பகுதிகளிலுள்ள அனைத்து மதத்தினரின் வழிபாட்டுத் தலங்கள் தகர்ப்படுவதும் தமிழர்களின் பாரம்பரிய சின்னங்கள் அழிக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

தமிழர்கள் வாழும் ஊர்களின் பெயர்கள் கூட மாற்றப்பட்டு ஒரு கலாசாரப் படையெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இது தமிழர்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிட்டுச் செய்யப்படும் சதியாகும். இதை இலங்கையின் போர் என்ற பெயரில் நடைபெற்ற இன அழிப்பின் தொடர்ச்சியாகவே கருத வேண்டும்.

வாழ்வாதாரமும் அடிப்படை மனித உரிமையும் நிராகரிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு கல்வி, அறிவியல் மற்றும் சமூக மேம்பாடு ஆகியன எட்டாக் கனியாக இருப்பதால் எந்த வகையில் பார்த்தாலும் அவர்கள் தங்கள் அடையாளங்களை முற்றிலுமாக இழந்தவர்களாகி பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து உரிய முறையில் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தி இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் மனித உரிமை மீறல்களைத் தடுக்கவும் அங்கு அமைதி நிலவவும் உள்ள ஒரே வழியான ஐக்கிய நாடுகள் சபை வாயிலான பொது வாக்கெடுப்பு என்கிற உலகத் தமிழர்களின் பெருவிருப்பத்துடனான கலைஞர் அவர்களின் கோரிக்கையினை விரைந்து செயற்படுத்திட தாங்கள் ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

(அ-2)



யா/இந்துக்கல்லூரி மாணவன் இரட்ணசிங்கம் செந்தூரன் 35 ஆவது தேசிய மட்டத்திலான கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டியில் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் 16 வயதுப் பிரிவினருக்கான உயரம் பாய்தலில் 1.92 மீற்றர் உயரத்தை தாண்டி சாதனை படைத்தார். இச்சாதனை மாணவனை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண ஆளுநர் பணிமனையில் அண்மையில் பரிசில் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

(படம்:-என்.குமார்)

# சட்டத்தை மீறும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## மருத்துவபீட ஆசிரியர் சங்கம் அறிக்கை

சட்டத்தை மீறும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கிறோம். அத்துடன் பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்ற சம்பவம் பல்கலைக்கழகத்தின் வெளியில் மட்டுமன்றி பல்கலைக்கழகத்தினுள்ளும்பாதுகாப்பின்மையைசுட்டிக்காட்டுகின்றது என யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் தாக்குதலுக்குள்ளானதை கண்டித்தும் துணைவேந்தரின் அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளானதை கண்டித்தும் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த 18 ஆம் திகதி காலை யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகை தரும்போது பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் மாணவர் ஒருவர் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டு காயத்திற்குள்ளாகியதையிட்டு ஒட்டுமொத்த பல்கலைக்கழ சமூகம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கையில் அதேநாள் மதியம் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிய வேளையில் சிலரால் துணைவேந்தரின் அலுவலக யன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்த அசம்பாவிதங்களும் மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றன.

இவ்விரு நடவடிக்கைகளின் நோக்கம் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதை குழப்புவதும் அதற்கு வன்முறையை ஊடகமாக பயன்படுத்துவதுமேயாகும்.

சட்டத்தை மீறும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கிறோம். அத்துடன் பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்ற சம்பவம் பல்கலைக்கழகத்தின் வெளியில் மட்டுமின்றி பல்கலைக்கழகத்தினுள்ளும் பாதுகாப்பின்மையை சுட்டிக்காட்டுகின்றது.

மேற்படி செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் பல்கலைக்கழக சார் ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களின் பாதுகாப்பிற்கும் குந்தகம் ஏற்படுவதை தவிர்ப்பதுடன் கல்விச் செயற்பாடுகள் சீராக நடைபெற உதவுவதுடன் எத்தரப்பினரும் வன்முறையை ஆயுதமாக பாவிக்காது அவரவர்களின் பணிகளை சரிவரச் செய்வதன் மூலம் ஒரு நல்ல சமூகத்தை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு நல்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# வாய்க்காலையும் கவனியுங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதிச் சந்தியில் காணப்படும் வாய்க்கால்கள் ஒருமாத காலத்திற்கு மேலாக திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியினூடாக பயணம் செய்யும் வாகனங்கள் சிரமத்தை எதிர்நோக்குவதோடு விபத்துக்களும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

எனவே, குறித்த வாய்க்காலினை உடனடியாக புனரமைத்து தருமாறு அப்பகுதி வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-4)

# எவரெட்ஸ் மலை ஏறி புதிய சாதனை

(காத்மாண்டு)

ஜப்பானைச் சேர்ந்த தமே வாட்னபி (வயது 73) என்பவர் எவரெட்ஸ் மலையை ஏறி புதிய சாதனை படைத்துள்ளார். மிகவும் கடினமாகக் கருதப்படும் திபெத்தின் தெற்குப் பகுதியிலிருந்து 8 ஆயிரத்து 848 மீற்றர் ஏறி கடந்த சனிக்கிழமை காலை சிகரத்தை அடைந்தார். இதன்மூலம் எவரெட்ஸ் மலையை ஏறிய வயதான பெண் என்று தனது பழைய சாதனையை இவர் முறியடித்தார். இதற்கு முன் இவருக்கு 63 வயதாக இருக்கும்போது 2002 ஆம் ஆண்டில் எவரெட்ஸ் மலை ஏறியிருந்ததே சாதனையாக இருந்தது.

வயதான ஆண்: வயதான ஆண்களில் நேபாளத்தைச் சேர்ந்த மின் பகதூர் ஷெர்பா என்பவர் 2007 இல் தனக்கு 77 வயதாக இருக்கும்போது எவரெட்ஸ் மலையை ஏறி சாதனை புரிந்ததே இன்றுவரை சாதனையாக இருந்து வருகிறது.

(அ-2)

# சேவை நலன் பாராட்டு



உயர்திரு. வேலுப்பிள்ளை தர்மகுலசிங்கம்

*இவர் 01.11.1985 முதல் 22.05.2012 வரை*
*யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுன்னாகம்*
*தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் கடமையாற்றி*
*இன்றுடன் (22.05.2012) ஓய்வு பெறுகின்றார்.*
*இவரது 27 வருட கால சேவையைப்*
*பாராட்டுவதோடு அவரின் ஓய்வுக் காலம்*
*சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்: முகாமையாளர், உத்தியோகத்தர்கள்
தேசிய சேமிப்பு வங்கி(NSB)
(சுன்னாகக்கிளை)

(C-057)


# யாழ்ப்பாணக் கின்ன கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

அகில இலங்கை யாழ்ப்பாண கிண்ண கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி 2012 இன்று செவ்வாய் கிழமை வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணி, யாழ்ப்பாண பாடசாலைகள் அணி, திருகோணமலை மாவட்ட அணி, இலங்கை பொலிஸ் அணி, இலங்கை விமானப்படை அணி, இலங்கை கடற்படை அணி மற்றும் இலங்கை படையினர் அணி என 7 அணிகள் அகில இலங்கை ரீதியாக பங்கு பற்றுகின்றன.

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக வட மாகாண உதவி உடற்கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் கலந்து கொள்ளவுள்ளார். இப் போட்டி இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

முதல் போட்டியில் இலங்கை விமானப்படை அணியும், இலங்கை கடற்படை அணியும் மோதுகின்றன.

போட்டிகள் அனைத்தும் காலை 6.30 மணியிலிருந்து 10 மணி வரைக்கும் மாலை 4 மணியில் இருந்து இரவு 8 மணி வரைக்கும் இன்றிலிருந்து தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளன.

# பதிலீட்டு ஆசிரியர்கள் கிடைத்தவுடன் வன்னி ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பதிலீட்டாசிரியர்கள் கிடைத்தவுடன் வன்னி மாவட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களில் ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்த யாழ்.மாவட்டத்தை சேர்ந்த ஆசிரியர்கள் தமது சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பின்பும் இடமாற்றம் வழங்கப்படாதமையை எதிர்த்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக முன்னர் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில் சுமார் 60 இற்கும் மேற்பட்ட வன்னி மாவட்ட ஆசிரியர்கள் வட மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.

ஒன்று கூடியிருந்த ஆசிரியர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்து கலந்துரையாடிய போதே வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இடமாற்றத்திற்கான கோவைகள் தயாரிக்கப்பட்டு வருவதோடு பதிலீட்டாசிரியர்கள் கிடைத்தவுடன் இடமாற்றத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இடமாற்றத்திற்கு தகுதியானவர்களாக உள்ள போதிலும் பதிலீட்டாசிரியர்கள் இல்லாததனால் உடனடியாக இடமாற்றத்தை வழங்க முடியவில்லை என்றார். இருப்பினும் உடனடியாக தமக்கு இடமாற்றத்தை பெற்றுத் தருமாறு ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ந-6)

# யாழ். பல்கலை கல்வி சாரா ஊழியர் இன்றும் நாளையும் வேலைநிறுத்தம்

கூட்டு உடன்படிக்கையை இழுத்தடிப்பு செய்யாது அமுல்படுத்தக்கோரி பல்கலைக்கழக கல்வி சார ஊழியர்கள் இன்றும், நாளையும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரி உயர் கல்வி அமைச்சின் செயலாளருடன் தொழிற்சங்க கூட்டுக்குழுவிற்கும் இடையில் கடந்த பெப்ரவரி மாதம் 29-ம் திகதி இடம்பெற்ற கூட்டு உடன்படிக்கையை அமுல்படுத்தக்கோரி கடந்த 15-ம் திகதி கொழும்பில் உயர்கல்வி அமைச்சு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றிக்கு முன்பாக மறியல் போராட்டம் மேற் கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே இன்றும் நாளையும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென தொழிற்சங்க கூட்டுக்குழுவும் அதில் அங்கம் வகிக்கும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனமும் தீர்மானித்துள்ளன.

இப்போராட்டம் எமது யாழ். பல்கலைக் கழகத்திலும் இடம்பெறும். இதில் பாதுகாப்பு ஊழியர்களும், மருத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கண்காட்சியில் பணிபுரியும் ஊழியர்களும் விலக்களிக்கப்பட்டுள்ளனர் என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராஜா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-6)

## சரத்தின் 27 மாத...

செய்யப்பட்டார். சிறையில் இருந்தவாறே அதே ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அவர் போட்டியிட்டு 98 ஆயிரத்து 485 வாக்குகளைப் பெற்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரானார்.

சரத் பொன்சேகா, இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் இராணுவத்தினருக்கான ஆயுதக் கொள்வனவில் மோசடி இடம்பெற்றதென்ற குற்றச்சாட்டில் அவருக்கு இராணுவ நீதிமன்றம் 30 மாத சிறைத் தண்டனை வழங்கியிருந்தது. அத்துடன் வெள்ளைக் கொடி வழக்கில் அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மூன்று வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இதனையடுத்து சிறையில் அடைக்கப்பட்ட சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு தொடர் அழுத்தங்களை பிரயோகித்து வந்த நிலையில், சரத் பொன்சேகாவை அரசு நேற்று விடுதலை செய்துள்ளது. (ந-8-11)

## மோ.சைக்கிள்...

அராலி பகுதியிலிருந்து நெல்லியடி கிழக்கில் உள்ள கிராம அலுவலகத்திற்கு வந்த கிராம சேவையாளரின் மோட்டார் சைக்கிளும் குஞ்சர்கடை சந்தியில் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிய விபத்திலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சங்கானை அராலி பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் சிறிகுமார் (வயது 37) என்ற கிராம அலுவலகரே உயிரிழந்தவராவார்.

அவருடன் மோதுண்ட மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களான கொற்றாவத்தை சமரபாபு பகுதியை சேர்ந்த வா.சீலன் (வயது 22), பா. நிதர்ஷன் (வயது 21) ஆகிய இருவருமே படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குஅனுப்பப்பட்டுள்ளனர். (ந-3-24-10-17)

## நல்லிணக்க ஆணைக்...

குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அதிகாரப்பகிர்வு தொடர்பான பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் சிங்கள மக்கள் தொடர்பில் ஆணைக் குழு கவனம் செலுத்தவில்லை. யுத்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வெளிநாடுகளில் வாழும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக ஆணைக் குழு எவ்வித பரிந்துரைகளையும் முன்வைக்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## சர்வதேசத்திற்கு...

மனமேந்திர தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டால் அந்தப் பெருமை பொது எதிர்க் கட்சிகளையே சாரும் எனவும் அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவை என்ன நிபந்தனை அடிப்படையில் அரசு விடுதலை செய்கிறதெனத் தெரியவில்லை.

அவர் மறுபடியும் அரசியல் களத்தில் குதிக்க முடியாத அளவிலே அவர் அரசால் விடுதலை செய்யப்படுவார் எனத் தெரிய வருகின்றது எனப் புதிய சிஹல உறுமய கட்சியின் செயலாளர் சரத் மனமேந்திரா தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிர்க் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-8-11)

## மகிந்தவின் அராஜக...

மகிந்த அரசின் பழிவாங்கல் நிமித்தம் சிறை சென்ற என்னை, இன்னும் 10 வருடங்கள் தடுத்து வைத்திருந்தாலும் என்னுடைய தைரியம் ஒருபோதும் சிதறியிருக்க மாட்டாது.

எனக்காக மக்கள் சிந்திய கண்ணீரை நான் ஒருபோதும் மறந்துவிட மாட்டேன். எனக்கு நேர்ந்த அசாதாரணத்துக்காக மக்கள்பட்ட வேதனையையும் மறந்துவிட மாட்டேன். இன்று முதல் மக்களுக்கான எனது பணி மீண்டும் தொடரப் போகின்றது. எமது மக்களுக்காக என்னை நான் தியாகம் செய்வேன்.

மக்கள் எனக்கு பாரியதொரு சக்தியினை வழங்கியுள்ளார்கள். அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட எனக்கு நியாயம் கிடைக்க எனது மக்கள் என்னோடு தொடர்ந்தும் இருக்க வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் உங்களுக்காக நான் இருப்பேன். படையினர் இந்த நாட்டுக்கு பெற்றுக் கொடுத்த வெற்றியினை தொடர்ந்து பாதுகாப்பேன். மக்கள் மத்தியில் சந்தோஷமும், சமாதானமும் நிலைத்து நாட்டில் ஜனநாயகமான ஆட்சியை கொண்டுசெல்ல நாம் அனைவரும் இணைந்து பாடுபடுவோம்.

நான் மீண்டும் இந்த நாட்டுக்காக என்னை தியாகம் செய்வேன். என் உயிரைக் கொடுத்தேனும் எம் மக்கள் சந்தோஷமாக வாழ வழி அமைப்பேன்.

மகிந்த அரசின் இந்த அராஜக ஆட்சியை கவிழ்ப்பது தான் எனது ஒரே இலக்கு. நான் எவரிடமும் மண்டியிடப் போவதில்லை.

சிறையில் என்னை அடைத்து என்னை அடக்கிவிடுவதற்கு மகிந்த அரசு கடந்த காலங்களில் முயற்சி செய்தது. அது முடியாமற் போனதால் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனது உடல்நிலை ஆரோக்கியமான நிலைக்குத் திரும்பியிருக்கிறது. எனக்காக பாடுபட்ட எனது நாட்டு மக்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என சரத் பொன்சேகா தெரிவித்தார். (ந-8-11)


# துயர் பகிர்கின்றோம்

அன்பு ஐயா எங்கே சென்று விட்டீர்
உங்கள் பூமுகம் காண
ஏங்கித் தவிக்கிறது எம்முள்ளம்
உமது பிள்ளைகள் கதறும் ஓசை
கேட்டு நெஞ்சம் கனக்குதய்யா
உறவுகளின் விம்மல்
உள்ளத்தை நெருடச் செய்கிறது
அன்புப் பத்மநாதனே
மண்ணகம் இருந்து விண்ணகம் சென்று
மகிழ்வுடன் வாழ்வீர்




அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன்

உம் பிரிவால் வாடும் குடும்பத்தினர்களுக்கும் உறவினர்களுக்கும்
எம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

[C-056]

துயரில் பங்கு கொள்ளும்
தேவராசன் குடும்பம்

# தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவாசம் இராஜினாமா!



(கொழும்பு)

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பதவியிலிருந்து பிரதீப் காரயவாசம் ராஜனாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள் ளதாக பிரதீப் காரியவாசம் தெரிவித்துள்ளார்.

த பினான்ஸ் நிறுவனத்திற்குச் செந்தமான பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி அண்மையில் கொள்வனவு செய்ததில் ஒரே தினத்தில் பல மில்லியன் ரூபாய் இழப்பை சேமிப்பு வங்கி சந்தித்திருந்தது.

இந்த நிலையில், தலைவர் பதவியிலி ருந்து பிரதீப் காரியவாசம் விலக வேண்டும் என எதிர்க் கட்சிகள் உள்ளிட்ட தரப்பினரால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

அண்மையில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், ஜனாதிபதியின் சோதிடருமான சுமணதாஸ அபே குணவர்த்தன பதவி விலகியிருந்தார். அவரது ராஜினாமாக் கடிதத்தில் தலைவரும் பதவி விலக வேண்டுமெனக் கோரியிருந்தார்.

பிரதீப் காரியவாசம், பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8-11)


## கடைக் கட்டடங்கள் விற்பனைக்கு

பரந்தன், யாழ்ப்பாணம்- கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத் தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் நூற்றி ஐந்து அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்ப னைக்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:
K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 0212280020
(C-041)



## வேலை ஆட்கள் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் உணவகத்திற்கு வேலை ஆட்கள் ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை.

- டீ மேக்கர் (ஆண்)
- சப்பிளையர் (ஆண்)
- உதவியாளர் (ஆண்-பெண்)
- சமையலாளர் (ஆண்-பெண்)

தொடர்பு:- தனுஷ் கபே,
66, மணிக்கூட்டு கோபுர வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.
0775861437, 0774524780
(8492)



## கருத்தரங்கு 2012

**தமிழ்** நாக. தமிழிந்திரன்
(புதன், வெள்ளி - 3.30 - 5.00 pm)
ஆரம்பம் : 23.05.2012 புதன் 3.30 pm

- விளங்காத பகுதிகள் துரித மீட்டலும்
- சகல எதிர்பார்ப்பு வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

**BEACON**
வெலிங்டன் சந்தி, யாழ்நகர். (8494)



## CAC கல்வி நிலையம்

கந்தர்மடச் சந்திக்கருகில்....

**சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்**

சிங்களம் - கொழும்புப்புகழ்
கருணியநாதன்
Spoken and Grammer -
பிரபல ஆசிரியர்

அனைத்து வயதுப் பிரிவு மாணவர்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பம்

ஆரம்பம் - 23.05.2012 பிற்பகல் 4.00

தொடர்புகளுக்கு
இயக்குனர்
0212226402
(8487)


## கண்ணீர் அஞ்சலி



எமது வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த

**ப. ஐங்கரன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

(உரிமையாளர், நாதன் ஸ்ரோர்ஸ் வாரிவளவு, காரைநகர்)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

- வலம்புரிக் குடும்பம்


## கட்டட ஒப்பந்தகாரர் தேவை

K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் இருக்கும் இரண்டு மாடி கட்டடம் திருத்த வேலை செய்வதற்கு ஒப்பந்தகாரர் தேவை.

**தொடர்பு கொள்ளவும்**
**021 321 3333**
**க. ஜெயபாலகணேசன்**
**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி.**
(8495)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் வேலுப்பிள்ளை நடராசா
(பாலசுந்தரம்)



முன்னாள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளர்,
முன்னாள் கிராம சபை அங்கத்தவர், மண்டைதீவு

திதி:-22.05.2012

பிறப்பு 12 . 04 . 1927

இறப்பு 22 . 04 . 2012

கணப்பொழுதும் ஓயாது காலமெலாம் ஓடி உழைத்து
சாதனைகள் பல படைத்து கடமைகளை முடித்து
ஞாலமெலாம் சுற்றித்திரிந்த உந்தன் கால்கள்
ஓய்ந்தனவோ ஐயா உறங்கியதோ!
தர்மதானங்களில் சிறந்தவராய்; பண்பின் ஊற்றாய்
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் குலவிளக்காய் ஆலமரமாய் நின்றீரே ஐயா
விழிகள் நாமிங்கு விம்மி விம்மி கண்ணீர் மல்க நிற்கின்றோம்
அம்மாவின் துடிப்பாய் உயிரின் ஓட்டமாய் விடியும்
காலையாய் வீசும் காற்றாய் இருந்தீரே
எல்லோரின் முகவரியாய் ஆணிவேராய் இருந்தீரே
உம் சிந்தனையே எம் பாதையாய் இருந்தோமே ஐயா
ஆறுதல் இல்லை ஐயா நாம் வேதனையில் வாடுகின்றோம்
நினைவுகள் எம்மிடமுமாய் நிஜத்திலே இறைவனிடமுமாய்
கலந்திருக்கும் உங்கள் ஆத்மாசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் வேலுப்பிள்ளை நடராசா(பால சுந்தரம் சுவிஸ் மொந்திரோவில் 22.04.2012 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு, எமது துயரில் பங்கு கொள்ள இல்லம் நாடி வந்தவர்கள் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் தாயகத்திலும் ஏனைய நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்கள் இரங்கல் செய்தி அனுப்பியவர்கள் மற்றும் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சுவிஸ், கனடா

தகவல்-நடராசா பாலேந்திரா(ராசன்)
சுவிஸ்-00417986328
சுவிஸ்-00414478004
கனடா-00164785295
(C-045)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.